Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 17 ஞாயிற்றுக்கிழமை (31.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 243

## ஊர்காவற்றுறையில் இளைஞன் மீது வாள்வெட்டு

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள வீட்டுக்குள் நேற்று முன்தினம் இரவு அத்துமீறி நுழைந்த குழு, இளைஞன் மீது வாள்வெட்டினை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் எஸ்.சசிகரன் என்பவர் பலத்த வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டியில் வந்த மூன்று பேர் கொண்ட குழு, இத்தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக உறவினர்கள், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி, தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (25)

## உள்ளக விசாரணைக்கு கால எல்லை தெளிவுபடுத்த வேண்டும் அரசாங்கம்

### மாற்று கொள்கைக்கான மத்திய நிலையம் வலியுறுத்து

உள்நாட்டு விசாரணை மற்றும் அதன் கால எல்லை தொடர்பான விளக்கத்தை அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளது.

மறுசீரமைப்பு மற்றும் நீதியை நிலைநிறுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் குறித்த தகவல்களை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும் அந்த நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான உள்நாட்டு பொறிமுறை அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு அண்மையில் உறுதியளித்திருந்தது.

அதேநேரம் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் இவை எவ்வாறு செயற்படவுள்ளன? அதன் கால எல்லை மற்றும் உள்ளடக்கப்படவுள்ள பிரதேசம் போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் அவ்வாறான தகவல்களை அரசாங்கம் மக்களுக்கு அறியச் செய்ய வேணடும் என்று அந்த அமைப்பின் அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## வேலியே பயிரை மேயும் நிலை - வடக்கில் அதிகரிக்கும் மாணவர் துஷ்பிரயோகம்

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த பின்னர் யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் இருந்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களாலும், ஏனையோராலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சம்பவங்கள் குறித்து தமது அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் இடமபெற்றபோதிலும் இது தொடர்பாக பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்வதை தவிர்த்த போதிலும், அவை குறித்து கல்வி அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பூகோள நலன்களை விடுத்து அறிக்கைவெளிவர உதவுங்கள்

### இந்தியா, அமெரிக்காவிடம் கோரிக்கை



(கொழும்பு)

அமெரிக்கா, இந்தியா உட்பட ஏனைய நாடுகள் தமது பூகோள நலன்களை மையப்படுத்தி செயறபடாமல் இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென ஒக்லண்ட் நிறுவனமென்ற கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட அமெரிக்க ஆய்வு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டல் தெரிவித்துள்ளார்.

இந்த மையத்தினால், தயாரிக்கப்பட்ட இலங்கையில் போருக்குப் பிந்திய நிலைமைகளை விபரிக்கும், 'போரின் நீண்ட நிழல்' என்ற அறிக்கையைத் தயாரித்த அனுராதா மிட்டல், இந்த அறிக்கை வெளியீட்டை முன்னிட்டு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக கொடுப்பதற்கு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நீதித்துறை சார்ந்த நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் கடந்த கால நடவடிக்கைகளின் அடிப்படையில், எந்த ஒரு தீர்க்கமான நடவடிக்கைக்கும் அனைத்துலக அழுத்தம் அவசியமானது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை

(19) ஆம் பக்கம் பார்க்க

## 20 குறித்து முரண்பாடு நாடாளுமன்ற கலைப்பு தாமதமடையுமா?

தேர்தல்முறை மாற்றம் தொடாபான 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் கட்சிகளிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது தாமதிக்கப்படலாம் என சிங்கள பத்திரிகை ஒன்று நேற்று தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தை ஜுன் மாதம் கலைத்துவிட்டு, செப்ரெம்பர் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தரம் 1 மாணவர் அனுமதி சுற்று நிருபம் தாமதமாகும்

அடுத்த வருடம் தரம் 1 இற்கு மாணவர்களைச் சேர்க்கும் சுற்று நிருபம் தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்பொழுதுள்ள சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவதா? அல்லது திருத்தம் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவதா? என்ற தீர்மானம் இதுவரை எட்டப்படாதுள்ளதாக கூறப்படுகின்றது.

கல்வி அமைச்சர் வெளிநாடு சென்றுள்ளதனால், அவர் நாடு திரும்பியதும் இது தொடர்பிலான தீர்மானத்துக்கு வரவுள்ளது. வழமையில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்ப

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் மாணவியை காணவில்லை



கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் தரம் 11இல் கல்வி பயிலும் 16 வயது மாணவியை கடந்த வியாழக்கிழமை முதல் காணவில்லை என பெற்றோர் நேற்றைய தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த வியாழக்கிழமை ஊற்றுப்புலத்தில் உள்ள தனது

(19) ஆம் பக்கம் பார்க்க

## கட்சிமாறும் அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட கிடைக்காது வாய்ப்பு

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வகையில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளில் இருந்து அணி மாறும் எந்த அரசியல்வாதிக்கும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்ரமசிங்க இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.


நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமரும் இந்த இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக இணைந்து அமைத்த

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்காக சேவையாற்றுவோர் எவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இல்லை

### பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகம்



இன்று அரசாங்கத்தைச் சார்ந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் எவரிடமும் மக்களுக்காக சேவையாற்றும் ஆளுமை இல்லை அதனால் மக்களின் மிகப் பெறுமதியான வாக்குப்பலம் விரையமாக்கப் படுகின்றது என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சபாநாயகம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரால் நேற்றைய தினம் ஆனைவிழுந் தானில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் குறைந்த அரசியல் பலத்தினைக்கொண்டு மக்களுக்கு அதிகளவான சேவைகள்ள ஆற்றி வருகின்றோம் ஆனால் அதிக வாக்குப்பலத்துடன் அரசாங்கத்தை சார்ந்து செயற்பட்டு வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரை மக்களுக்கு எந்தச் சேவையையும் ஆற்றவில்லை தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்து செயற்பட்டுவருவதாகக் கூறிக் கொள்ளும் அவர்கள் மாகாண சபைத்தேர்தலில் மக்களால் மிக அதிகளவான வாக்குப்பலம் வழங்கப்பட்டபோதும் அதை பொருட்டாகக் கொள்ளவில்லை.

நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்வதற்கோ காணாமற்போனவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ அவர்கள் முயற்சிக்கவில்லை ஆனால் எமக்கு அந்தளவு பலம் கிடைத்திருக்குமானால் நிச்சயமாக நாம் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்போம் நீண்டகாலமாக எமது மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை வெகுஜன போராட்டங்களின் மூலம் தீர்வு காண்பதற்கும் முயற்சித்திருப்போம் எனினும் குறைந்த அளவு பலம் எம்மிடமிருக்கின்றபோதும் அதைவிட அதிகமான சேவைகளை நாம் மேற்கொண்டிருக்கின்றோம். காணாமற் போனவர்களைக் கண்டறிதல் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

குறைந்த வாக்குப்பலம் இருந்தபோதும் அதிகமான ஆளுமையை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கொண்டிருப்பதால் அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் மிக அதிகமான சேவைகளை மேற்கொண்டிருக்கின்றார். நாட்டில் பெரும்பான்மை இனம் சிங்களவர்களாக இருப்பதனால் எப்போதும் அரசாங்கம் சிங்களவர்களிடமே இருக்கும் ஆனால் அந்த அரசாங்கத்தை பயன்படுத்தி எமது தேவைகளை நிவர்த்தி செய்யவேண்டுமானால் நுட்பமான அணுகு முறையும் மிகச் சரியான ஆளுமையும் செலுத்தப்பட வேண்டும்.

இந்நிலையில் அரசாங்கத்தைச் சார்ந்து செயற்பட்டுக் கொண்டு தமதுதேவைகளை மட்டும் நிவர்த்தி செய்துகொண்டிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரிடமும் அரசாங்கத்தின் சேவைகளை தமிழ் மக்களுக்காக திசைதிருப்புவதற்கான ஆளுமை இல்லை அதனால் மக்களின் மிகப் பெறுமதியான வாக்குப்பலம் விரையமாக்கப்படுகின்றது. எனவே மக்கள் தேர்தல்காலங்களில் ஆளுமை கொண்டவர்களை பிரதிநிதிகளாக தெரிவுசெய்யவேண்டும் அதுவே அதிக தேவைகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு விடிவினைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் மக்களும் கலந்துகொண்டனர்.


**மக்கள்வங்கி**

**கொடிகாமம் கிளை**

வாடிக்கையாளர்களுக்கு
மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன்
நவீன வசதிகள் நிறைந்த
மக்கள் வங்கியின்
சாவகச்சேரி கிளையுடன் இணைந்த
கொடிகாமம் கிளை

மக்கள் வங்கியின்
பிரதான நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்
**திரு.என்.வசந்தகுமார் அவர்களின்**
அழைப்பின் பேரில்
மக்கள் வங்கியின் தலைவர்
**திரு. ஹேமசிறி பெர்னாண்டோ அவர்களினால்**
**2015 ஜூன் மாதம் 1ஆம் திகதி**
**மு.ப. 11.30 மணிக்கு**
அமையும் சுபவேளையில்
திறந்துவைக்கப்படவுள்ளது என்பதனை விசேடமாக
இப்பிரதேச மக்களுக்கு மகிழ்வுடன்
அறியத்தருவதோடு
இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு
உங்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

**இங்ஙனம்:**
**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/3506)


# வன்னி விளாங்குளத்தில் வருடாந்த பொங்கல் விழா



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வன்னி விளாங்குளம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெங்கல் உற்சவம் நேற்று முன்தினம் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

ஆலயபிரதம பூசகர் வன்னியசிங்கம் மாப்பானப்பிள்ளையால் பூசைகள் இடம் பெற்று சுவாமி வீதியுலா வந்ததோடு தூக்குக் காவடி, பாற்சொம்பு செடில்காவடி தீச் சட்டி போன்ற நேர்த்திக் கடன்களில் பெருந்திரளான அடியார்கள் பங்கு பற்றினர்.

அத்துடன் அடியார்களுக்கு அன்னதான நிகழ்வும் இடம் பெற்றதோடு இந்த ஆண்டும் பெருந்திரளான அடியார்கள் பூசைக்கு வருகை தந்தனர். (40)

# பேருந்து நிலையம் அமைக்க விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழ் வடமாகாண போக்குவரத்து அமைச்சினால் வடமாகாணத்தில் 20 பேருந்து தரிப்பிடங்கள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இத்தரிப்பிடங்கள் ஐந்து மாவட்டங்களிலும் 4 என்ற வீதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களில் இத்தரிப்பிடங்கள் அமைப்பதற்கு முக்கியமான இடங்கள் என கருதப்படும் இடங்கள் தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன் இவற்றை 30.06.2015ஆம் திகதிக்கு முன்னர் போக்குவரத்து அமைச்சுக்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதில் பேருந்து தரிப்பிடங்களை காணி, அரசு, தனியார் காணியாக இருப்பின் குறித்த பிரதேச உள்ளூராட்சி மன்றிற்கு அக்காணியை வழங்க வேண்டும். அத்துடன் 4 பேருந்து தரிப்பிடம் (10X8) அடி என்ற அளவுத் திட்டத்தில் அமையவிருப்பதால் தேவையான காணி வழங்கப்படுவதுடன் பேருந்து தரிப்பிடம் பிரதான வீதிகளிலிருந்து 13 அடி விஸ்திரணமாக இருக்க வேண்டும். இந்த 5 மாவட்டங்களிலும் இப்பேருந்து தரிப்பிடம் அமைக்க, உரியவர்கள் 30-06-2015இற்கு முன்னர் இதற்கான விண்ணப்பத்தை அனுப்பிவைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (இ)

# முத்துஜயன்கட்டு மீனவர்களுக்கு மீன்பிடி அமைச்சால் வலைகள் வழங்கல்



(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் முத்துஜயன் கட்டு நன்னீர் மீன் பிடிப்பாளர்களுக்கு வட மாகாண மீன்பிடி அமைச்சினால் 50 வீதம் மானிய அடிப்படையில் வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தி.குருபரன் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் முத்துஜயன் கட்டிலுள்ள மீனவர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஏனைய மீன்பிடி மீனவர்களுக்கும் 5 இலட்சம் ரூபா வட மாகாண மீன்பிடி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மீனவர்களுக்கான வலைகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்தினால் வைபவ ரீதியாக மீனவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் ரவிகரன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் இணைப்புச் செயலாளர் ப.ஜெரோம் எமிலயானுஸ்பிள்ளை, தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபை யின் மாவட்ட விரிவாக்கல் அதி காரி எஸ்.சலீபன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (40)

## பொங்கல் விழா

(வேலணை)

காரைநகர் மேற்கு கப்பபுலம் மாதடை (மருதப்புலம்) ஞான வைரவர் ஆலயத்தில் நாளை மாலை வைகாசி மாத விசாகப் பொங்கல் விழா சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணி அளவில் ஆரம்பமாகவிருக்கும் பொங்கல் விழாவைத் தொடர்ந்து ஞானவைரவர் பெருமானுக்கு விசேட பூசைகள் அபிசேகங்கள் இடம்பெறவுள்ளன. அத்துடன் அநேகமான மக்கள் பொங்கல் விழாவை மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (05)

# இலங்கையின் எதிர்கால வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்கப்போகும் தேர்தல்

the diplomat தளத்தில் Peshan Gunaratne, J. Berkshire Miller ஆகியோர் இணைந்து எழுதியுள்ள கட்டுரையில்.



இலங்கையின் கேந்திர மூலோபாய அமைவிடமானது இந்திய மாக்கடல் பிராந்தியம் மீதான போட்டியாளர்களான சீனா, இந்தியா மற்றும் யப்பான் உட்பட பல்வேறு நாடுகளினதும் இராஜதந்திர இலக்காக இதனை மாற்றியுள்ளது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சீனாவை இலங்கை முதன்மைப்படுத்தியது. குறிப்பாக மிகப் பாரிய கரையோரத்துறை முகங்களை அபிவிருத்தி செய்வதற்கான அனுமதியை சீனாவுக்கு இலங்கை வழங்கியது.

இந்தத் திட்டங்கள் மற்றும் சீனா நோக்கிய மகிந்த அரசாங்கத்தின் நட்பு சார் கோட்பாடுகள் அனைத்தும், மைத்திரிபால சிறிசேன இவ்வாண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மாற்றமடைந்துள்ளன.

ராஜபக்ஷவின் சீன ஆதரவுக் கொள்கையை மாற்றுவதில் சிறிசேன அரசாங்கம் தயக்கம் கொண்டிருக்காத அதேவேளையில், அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடனான முறிந்து போன கொழும்பின் உறவை மீளவும் கட்டியெழுப்புவதில் புதிய அரசாங்கம் முனைப்புக் காண்பிக்கிறது.

சீனாவின் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டதானது புதிய அரசாங்கத்தின் மிக முக்கிய நகர்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதற்கும் மேலாக, சீனாவின் நிதியுதவியுடனான மிகப் பாரிய திட்டங்களையும் இலங்கை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது. இதற்கான கேள்விப் பத்திரங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, வடக்கு நோக்கிய அதிவேக நெடுஞ்சாலையை அமைப்பதற்கான திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சீனாவின் உதவி வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை பெப்ரவரி 5 தொடக்கம் 7 வரை மேற்கொண்டிருந்தார். இவர் சீனாவின் சிறப்புத் தூதராகவே தனது பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் அதிகரித்து வரும் மூலோபாய உறவு தொடர்பில் இந்தியா அதிருப்தியடைந்துள்ளதால் இந்தியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையில் முத்தரப்புப் பேச்சுக்கள் நடாத்துவதென சீன அதிபர் தீர்மானித்திருந்தார்.

இருப்பினும், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அண்மையில் சீனாவின் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டதன் பின்னர் சீனாவுடனான உறவு நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான முரண்பாடு அதிகரித்து வரும் நிலையில், தனது அனைத்துக் காரியங்களுக்கும் நட்பாக இருக்கும் பாகிஸ்தானுக்கு சீனா 46 பில்லியன் டொலர் பெறுமதியான சக்தி மற்றும் கட்டுமான முதலீட்டுத் திட்டங்களுக்கான நிதியை வழங்கியுள்ளது.

இலங்கையின் தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னர், திட்டமிட்டபடி சீனாவுடனான இலங்கையின் உறவு–நிலையில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையை மாற்றுவதற்காக, கடந்த மார்ச் மாதத்தில் சீனாவுக்கான உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு சீன அரசாங்கம், மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுத்தது. சீனாவுக்கான சிறிசேனவின் பயணத்தின் போது கொழும்பு துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளையில், இந்தியாவானது தனது பிராந்தியத்தில் சீனாவால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளது. சீனாவால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் பாரிய திட்டங்கள் மற்றும் கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் போன்றன தொடர்பாக இந்திய மத்திய அரசாங்கம் விழிப்புடன் நோக்குகிறது.

இதற்கும் மேலாக, முத்துமாலை மற்றும் கரையோர பட்டுப்பாதைத் திட்டம் என அழைக்கப்படும் சீனாவின் மூலோபாய இலக்கை அடைவதற்கு சிறிலங்கா மையமாகப் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பிலும் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது.

சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், இந்தியாவிற்கு அரச முறைப் பயணத்தை மேற்கொண்டமை இந்திய – சிறிலங்கா உறவில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கியது.

இதன்பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது வரலாற்று முக்கியத்துவம் மிக்க பயணத்தை மேற்கொண்டதானது இவ்விரு அயல்நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தியது.

இதேபோன்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவைக் கட்டியெழுப்ப முடியும் என்கின்ற நம்பிக்கையுடன் பெல்ஜியத்திற்குப் பயணம் செய்திருந்தார்.

மங்கள சமரவீர, பெல்ஜிய வெளியுறவு அமைச்சர் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அனைத்துலக மீன்பிடி சட்டங்கள் மற்றும் ஜி.பி.எஸ் வரிச்சலுகை தொடர்பான மீள் தகைமைப்படுத்தல் முறைமை தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதேபோன்று அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இலங்கைக்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை மே மாதத்தில் மேற்கொண்டிருந்தார். இது மேற்குலகுடனான இலங்கையின் வெளியுறவுக் கோட்பாடு மாற்றப்பட்டுள்ளமைக்கான பிறிதொரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு பொருளாதார வளர்ச்சி, வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு அமெரிக்க வல்லுநர்களை இலங்கைக்கு உடனடியாக அனுப்புவதாக ஜோன் கெரி வாக்களித்திருந்தார். இதற்கப்பால், இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மீளவும் புதுப்பிப்பதுடன், அதனைக் கட்டியெழுப்பி, பலப்படுத்துவதாகவும் இணக்கம் காணப்பட்டது.

வோசிங்ரன் மற்றும் கொழும்பிற்கு இடையிலான அதிகரித்துவரும் புரிந்துணர்வானது மேலும் அதிகரிக்கப்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதால் இதன்மூலம் இது மேலும் பலப்படுத்தப்படும் எனவும் கூறப்படுகிறது.

கெரி, இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் இலங்கை கடற்படையைச் சேர்ந்த மூத்த பிரதிநிதிகள் குழு, இலங்கை கரைக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான Carl Vinson கப்பலுக்கு சென்றமை, இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான இராணுவ ஒத்துழைப்பு மீளவும் புதுப்பிக்கப்பட்டுள்ளமைக்கான பிறிதொரு சமிக்ஞையாகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது தேசிய அரசாங்கம் நடைபெறவுள்ள தேர்தல் மூலம் ஆட்சியமைக்குமா அல்லது இல்லையா என்பதும் தற்போது சிறிசேனவின் வெளியுறவுக் கோட்பாடு தொடர்ந்தும் பேணப்படுமா என்பதும் தெளிவில்லை.

இதேவேளையில், 'ஆச்சரியங்களை உள்ளடக்கிய' அறிக்கை ஒன்றை வரும் செப்ரெம்பர் மாதத்தில் இலங்கை எதிர்பார்க்க முடியும் என நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்திக்கான முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஐ.நா உயர் ஆணையாளர் செய்ட் பின் ராட்டுடனான தனது சந்திப்பின் பின்னர் தெரிவித்திருந்தார்.

இலங்கையானது ஐ.நா மனித உரிமைகள் சபையை எதிர்ப்பதா அல்லது ஒத்துழைப்பை வழங்குவதா என்பதையும் இது கீழைத்தேய நாடுகளுடன் நட்புறவைத் தொடர்வதா அல்லது மேற்குலக நாடுகளுடன் அணிசேர்வதா என்பதையும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலே தீர்மானிக்கும்.

# குடும்பங்களுக்கிடையே பிரச்சினை ஏற்பட போதைப் பொருள் பாவனையே காரணம்

## கிளி.மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் தெரிவிப்பு

குடும்பங்களிடையே பிணக்குகள் ஏற்படுவதற்கு போதைப் பொருட்களின் பாவனை ஓர் காரணமாக அமைந்துள்ளது. போதைப்பொருள் பாவனைக்கு அதிகபட்ச தண்டனைகள் விதிக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் தெரிவித்தார்.

கஞ்சா பாவனையில் மூழ்கி தன்னையும் பிள்ளைகளையும் தனது கணவர் துன்புறுத்தி வருகின்றார் என தெரிவித்து பெண்ணொருவர் தொடர்ந்த வழக்கு, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த வழக்கை நன்கு அவதானித்த நீதவான், தொடர்ந்து கருத்து கூறுகையில், "அதிகளவான குடும்பங்களிடையே வன்முறைகள், பிணக்குகள் ஏற்படுகின்றன.

இவற்றுக்கு போதைப்பொருட்களின் பாவனையே காரணமாக அமைகின்றன", "யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றத்தை அடுத்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் கலாசார சீரழிவுகள், போதைப்பொருட்களின் பாவனைகள் என்பவற்றின் அதிகரிப்பால் குடும்ப வன்முறைகள் குடும்பங்களின் பிரிவுகள் அதிகளவில் காணப்படுகின்றன. போதைப் பொருட்களின் பாவனைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று நீதவான் மேலும் தெரிவித்தார்.

# அபராதம் விதிப்பு

கிளிநொச்சி காட்டுப் பகுதிக்கு அண்மித்த பகுதியில் முயல் மற்றும் உடும்பு இறைச்சிகளை உடைமையில் வைத்திருந்த இருவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் எம்.ஐ.வகாப்தீன் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

கிளிநொச்சி காட்டுப்பகுதிக்கு அண்மையில் கடந்த வியாழக்கிழமை இறைச்சியுடன் நின்றிருந்த இருவரை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து, விசாரணை செய்ததில் அவர்களிடம் மேற்படி இறைச்சிகள் இருந்தமை தெரியவந்தது. இருவருக்கும் எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன்போது குற்றவாளிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

# உளவளத்துணை செயலமர்வு

மன்னார் மாவட்ட நானாட்டான் - முசலி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான உளவளத்துணைச் செயலமர்வு அண்மையில் முருங்கன் டொன் பொஸ்கோவிலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

யுனிசெவ் வவுனியாக்கிளையின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மன்னார்க் கிளை ஒழுங்குபடுத்திய இச் செயலமர்வை நானாட்டான் முசலி பிரதேச பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் சாள்ஸ், இலங்கை செஞ்சிலுவைச்சங்க மன்னார்க்கிளையின் தலைவர் கெனடி ஆகியோரும் ஆரம்பித்து வைத்தனர். இருநாட்கள் நடைபெற்ற இச்செயலமர்வில் வளவாளர்களாக நா.கு.மகிழ்ச்சிகரன், சு.இக்னேசியஸ் ஆகியோர் கலந்து கொண்டு வழிப்படுத்தினர்.

பயனுள்ளவகையில் அமைந்த இப்பயிற்சிநெறி போன்று மேலும் பல்வேறு பயிற்சிகளை தமக்கு தொடர்ச்சியாக நடத்தவேண்டுமென்று செயலமர்வில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.(160)

அன்புள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறான். - காந்தியடிகள்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உலகம் மாற வேண்டியிருக்கு!

“தமிழ்மக்களுக்கான தீர்வுக்கு என்ன செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்தியாவையும் சர்வதேசத்தையுமே சார்ந்ததாகும்”

என்று தங்களது கையாலாகாத்தனத்தைத் தமிழ் வீரமாகக் காட்டிக் கொண்டிருப்பவர்கள்தான் தமிழ் மக்களது தலைவர்களாகவும் அரசியல் ஆய்வாளர்களாகவும் தங்களை இங்கு பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு, இந்த நாட்டுக்குள் சாத்தியபூர்வமாக அமையக் கூடிய ஒரு தீர்வை வரையறுத்துச் சொல்லவும் முடியவில்லை; இந்தியாவும் சர்வதேசமும் எதை எடுத்துத் தரவேண்டும் என்று தெளிவாகக் கேட்கவும் முடியவில்லை.

ஆனால், அந்த சர்வதேசத்திற்கும், இந்தியாவுக்கும் இந்த நாட்டுப் பிரச்சினைக்கு எது தீர்வாக அமைய முடியும் என்பதில் தெளிவான கணிப்பிருக்கிறது.

அதைத்தான் அவர்கள் ஒவ்வொருமுறை இவர்களைச் சந்திக்கும்போதும், “போய் உங்கள் அரசுடன் பேசுங்கள்” என்று முன்பு சாடைமாடையாகவும் இப்போது பட்டவர்த்தனமாகவும் எடுத்துச்சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

இவர்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்து, “இந்த சர்வதேசமும் இந்தியாவும் சண்டை போட்டு, இப்போதிருக்கும் உலக ஒழுங்கு மாற்றமடைய வேண்டியிருக்கிறது; அதுவரை நாம் காத்திருக்க வேண்டியிருக்கிறது” என்று நமக்கு வெகு சீரியஸாக உணர்த்துகிறார்கள்.

நமக்குத்தான் எல்லாவற்றையும் விட முதன்மையானதாக ‘சிங்களப் பகை’ மனதில் நிறைந்து கிடக்கிறதே! ஆதலால், “தீர்வு எப்போது வேண்டுமானாலும் வரட்டும்; சிங்கள அரசு திக்குமுக்காடும் செய்திகளைக் கேட்டு வாசித்து மகிழ்ந்து கொண்டிருப்பதே போதும்” என்று நினைக்கிறோம்.

சிங்கள அரசின் மீதும் சிங்கள சமூகத்தின் மீதும் நமக்கிருக்கும் வெறுப்பும் பகையும் வடிந்துவிடாமலிருக்க, ஒவ்வொரு நாளும் ஒரு தேக்கரண்டி மருந்து எடுத்துக்கொண்டு புறப்படுவதுபோல, காலையில் நமது பத்திரிகைகளையோ, புலம்பெயர் பணத்தில் தமிழ்ச் சேவை செய்யும் இணையத் தளங்களையோ பார்த்தால் போதும்!

இப்போதும் நமது கூட்டமைப்புக்குள் குத்துவெட்டு நடப்பதிலிருந்து கூட்டு வல்லுறவுகளும் கொலைகளும் கொள்ளைகளும் நடப்பது வரை,

குடிக்க நல்ல தண்ணி இல்லாததிலிருந்து பிடித்துக் குந்தியிருக்கும் மாகாணசபையால் சம்பளமும் வாகனங்களும் மட்டுமே வாங்க முடிவது வரை,

எல்லாமே சிங்கள அரசினதும் சிங்கள சமூகத்தவரதும் இனப் பழிவாங்கல் நடவடிக்கைகளேதான் என்பதில் நந்தமிழர் யாருக்கேனும் சந்தேகமிருக்கிறதா?

சிங்களத் தலைவர் யாரேனும் “இனங்களுக்கிடையேயான நல்லுறவுக்கு முயற்சிக்க வேண்டும்” என்று சொல்லிவிட்டால் கூட, “நல்லுறவுக்கு முயற்சிக்கிறார்களாம்!” என்ற தலைப்பில் கிறுகிறுத்து கொடுப்புக்குள் சிரித்துவிட்டுப் போக, ‘மாம்’ செய்திகளில் ‘தமிழ்வீரம்’ ஊட்டி வளர்க்கப் படுபவர்கள் நாம்!

சிங்கள அரசும் இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா.வும் கூட நமது கூட்டுப் பிரக்ஞையைத் திருப்திப்படுத்தும் தேவையை இனனும் உணராமலிருக்கிறார்கள்.

சர்வதேசம் அதை உணர்ந்துகொண்டு இலங்கை அரசை மிரட்டி அடக்கி வைத்துவிட்டு, நம்மைத் தனியாக வாழ ஏற்பாடு பண்ணித் தருவதை நோக்கியே நாம் உலக நிகழ்வுகளை மெல்ல உருட்டி நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.

நம் தலைகளும் ஊடகங்களும் ஆய்வுப் பெருங்குடிகளுமாக, ஐந்து வருடங்களுக்கும் மேலாக, தமிழன் இந்த உலகோடு பேரம் பேசுபவனாக ஆவதை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்!

எப்படியும் அங்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். தலைகளா கொக்கா.... என்ன, சர்வதேசம் எனப்படும் இந்த உலகம் தான் அதற்கேற்ப மாற்றமடைய வேண்டியிருக்கிறது! மாறுதல் தானே மாறாத விதி! காத்திருப்போம்!

- ஆசிரியர்

# புங்குடுதீவுப்படுகொலைக்கு மறைமுக உதவி புரிந்தவர்கள் யார்?

## புதியகோணத்தில் விசாரணைகள் நகர்கிறது

(யாழ்ப்பாணம்)

“புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டுப் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைகள் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பல கோணங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள 9 போரையும் தவிர விசாரணைகள் முடிவடையும் வரை இதனுடன் மேலதிகமாக தொடர்புடையவர்கள் குறித்து எதனையும் குறிப்பிட முடியாது.” இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வித்தியா படுகொலையைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து அங்கு பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை தொடர்பில் 130 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்பிலான விசாரணைகள் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படுவதோடு இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் பொலிஸாரின் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்படுமானால் கடமையில் இருந்த பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

# அரசியல் கைதிகள் விவகாரம்; அமைச்சரவைக்கு அறிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூடிய கவனம் செலுத்துவதாகவும், வெகுவிரைவில் நல்ல செய்தியை எதிர்பார்க்கலாம் எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான அறிக்கையை வெகுவிரைவில் அமைச்சரவையில் சமர்ப்பித்து கைதிகளை விடுவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் தற்போதைய நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாம் தொடர்ச்சியாக அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். கடந்த காலத்தில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் தகவல்களை சேகரித்து ஆவணப்படுத்தியுள்ளோம். எனவே, எமது முயற்சியை நாம் கைவிடப்போவதில்லை. வெளிநாடு சென்றுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாடு திரும்பியவுடன் அவரைச் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளோம். அத்தோடு நாம் சேகரித்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் தொடர்பிலும் அவருடன் பேச்சு நடத்தி அதன் பின்னர் தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

எப்படியேனும் வெகுவிரைவில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நல்ல செய்தியை எதிர்பார்க்க முடியும் என்றார்.

# ஆயரின் பிரதிநிதிகள் புங்குடுதீவு விஜயம்

கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் வீட்டிற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதியாகச் சென்ற மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை குறித்த மாணவியின் பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் கலந்துரையாடியதோடு தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர அதிவணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்று வரும் நிலையில் ஆயரின் பிரதிநிதியாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை, தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் சென்று கலந்துரையாடினர். இதன போது மாணவியின் கொலை தொடர்பில் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும், தம் மகளுக்கு நடந்தது போல் இனியாருக் கும் நடக்கக்கூடாது என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

எங்களுக்கு எந்த வித உதவிகளும் வேண்டாம் ஆனால் குற்றவாளிகளுக்கு அதிகூடிய தண்டனை வழங்கப்பட வேண்டும் எனத்தெரிவித்ததோடு தற்போது தாம் வீட்டில் பாதுகாப்பற்ற சூழலிலே வாழ்ந்து வருவதாக மாணவியின் சகோதரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு இவர்களுக்கு அதி கூடிய தண்டனையை வழங்க வேண்டும் என மாணவியின் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இருவாரங்களில் பத்து மாணவிகள் வடக்கில் பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கடந்த 14 நாட்களில் மாத்திரம் வடமாகாணத்தில் 10 பாடசாலை மாணவிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள அதிர்ச்சித் தகவலை இராஜாங்க கல்வியமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

பாடசாலைக்கு வெளியிலுள்ள சிலரால் இந்தப்பாலியல் வன்புறுத்தல்கள் நடத்தப்பட்டுள்ள போதிலும், இதில் பாடசாலைகளில் கற்பித்துக் கொடுக்கும் ஒருசில ஆசிரியர்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கவலையை அளிப்பதாக அமைச்சர் கூறினார்.

இதற்கமைய கடந்த இரண்டு வாரங்களில் இடம்பெற்றுள்ள இச்சம்பவங்களில் 10 மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்திருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மலையகத்தில் காணி பகிர்ந்தளிப்பு

அரசாங்கத்தின் “பசுமை பூமி” காணி உறுதி வழங்கும் மூன்றாம் கட்ட நிகழ்வு நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கண்டியில் நடைபெற்றது. கண்டி மாவட்டத்தில் பன்விலை ராஜசிங்கம் மகா வித்தியாலயத்திலும் கலஹா பத்ராவதி மகா வித்தியாலயத்திலும் என இரு நிகழ்வுகளாக பசுமை பூமி காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல சிறப்பு அதிதியாகப் கலந்து கொண்டார்.



**சுயநிர்ணய உரிமையின் கீழ் பிரிவினையைத் தவிர வேறு தீர்வு சாத்தியமில்லை என்று சில அரசியல்வாதிகள் மக்களை தவறாக வழி நடாத்துகின்றார்கள். சுயநிர்ணய உரிமை யின் ஆகக் கூடுதலான தீர்வு பிரிந்து செல்லல். தவிர்க்க முடியாத காரணங்களால் அது சாத்தியமில்லை என்றால் மக்களுக்கு மாற்றுத் தெரிவு இருக்கவேண்டும். இந்த மாற்றுத் தெரிவைச் சரியான முறையில் கையாளத் தவறி னால் தமிழ் அரசியல் தேக்க நிலையை அடைந்துவிடும். முன்னேற்றம் எதுவும் இருக்காது.**

# பிரச்சினைகளின் தீர்விலிருந்து மக்களைத் திசை திருப்பும் தலைமை

**சங்கர சிவன்**

தமிழ் மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் வளர்கின்றன. அறுபது வருடங்களுக்கு மேற் பட்ட அரசியலில் எந்தப் பிரச்சினையும் தீரவுமில்லை. தீர்வை நோக்கி நகரவுமில்லை. ஐம்பது வருடங்களுக்கு முந்திய நிலையுடன் ஒப்படுகையில் இப்போது புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. பழைய பிரச்சினைகள் புதிய பரிமாணத்தில் வளர்ந்திருக்கின்றன. இக்காலப் பகுதி முழுவதிலும் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளே தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை வழங்கின. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அல்லது தீர்வை நோக்கிய நகர்வை ஆரம் பிப்பதற்கு இக்கட்சிகளினால் ஏன் முடியவில்லை என்ற கேள்வி இன்று ஒவ்வொரு தமிழ் மகனி டமும் எழ வேண்டும். நடை முறைச் சாத்தியமானதும் நியா யமானதுமான நிலைப்பாட்டைமேற் கொள்ளாமல் தேசியவாத உணர் வலைக்குள் சிக்கியிருந்ததே இத் தோல்விக்கான காரணம் எனலாம்.

பழைய தலைமைகளின் வாரிசாக அதே பாணியிலேயே இப் போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு செயற்படுகின்றது. தமிழ்த் தேசியவாத அலைக்குள் (தமிழ்த் தேசியம் என்று சொல் கின்றார்கள்) நிரந்தரமாக மக் களை மூழ்க வைத்திருந்தாலே போதும் என்ற அளவில் கூட்ட மைப்பு செயற்படுகின்றது. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் எல்லாப் பிரச்சினைகளுள்ளும் பிரதா னமானது இனப்பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் மற்றைய பிரச்சினைகள் தீர்ந்தத்ற்குச் சமன். இனப்பிரச்சினைக்கான தீர்வில் கூட்டமைப்பு கவனம் செலுத்துவதாக இல்லை. தமிழ்த் தேசியம் என்ற மந் திர வார்த்தையால் மக்களைக் கட்டி வைத்திருக்கின்றார்களேயொழிய இனப் பிரச்சினையின் தீர்வு பற்றிச் சிந்திப்பதற்கு மக்களுக்கு இடமளிப்பதில்லை. தமிழ்த் தேசியம் இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல என்பதை மக்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

முழுமையான அதிகாரப் பகிர்வு என்று கூட்டமைப்பு கூறுவதும் ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுவதும் தீர்வு பற்றிய தெளிவை மக்களிடம் ஏற்படுத்தவில்லை. இப்பதப் பிரயோகங்களால் மக்கள் குழம்புகின்றார்கள். வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தீர்வு எது என்று தெரியாமல் குழம்புகின்றார். மன்னார் ஆயரின் தலைமையில் எல்லோரும் கூடி எமக்கான தீர்வு எது என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

தமிழ் மக்களுக்கான தீர்வைச் சிறி சேன தருவார், ரணில் தருவார்., சந்திரிகா தருவார் என்று எண்ணுவ தெல்லாம் மடமை என்றும் கரவாகக் காரியங்கள் ஆற்றாமல் எமக்கான தீர்வு என்ன என்பதைத் தமிழ்த் தலை வர்கள் கூறவேண்டும் என்றும் அண் மையில் ஒரு கூட்டத்தில் பேசினார். கஜேந்திரகுமாரின் ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்ற கோட்பாட்டையும் இடைக்கிடை தூக்கிப் பிடிக்கிறார். விக்னேஸ்வரன் வெளியிடும் கருத்துக்கள் கூட்டமைப்பின் உள் முரண்பாட்டைச் சந்திக்குக் கொண்டு வருவது ஒருபுறமிருக்க தீர்வுக்கான திட்டம் எதுவும் இல்லாமலே கூட்ட மைப்பு தமிழ் மக்களை வழிநடத்துகின் றது என்பதை ஒத்துக் கொண்டிருப்பது முக்கியமானது.

ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்ற கோட்பாட்டை நடைமுறைச் சாத்தியமற்றது என்று கூட்டமைப்பு நிராகரித்திருப்பது பற்றி எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால், இக்கோட்பாடு மக்களைக் குழப் புகின்றதேயொழியத் தீர்வுக்கு அவர்களை வழி நடத்தவில்லை. இக்கோட்பாட்டின் கீழ் இவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு என்ன? தனி நாடா? சமஷ்டியா? பிரதேச சுயாட்சியா? முழுமையான அதிகாரப் பகிர்வா? கோட்பாடு தீர்வாக முடியாது. கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வை முன்வைக்க வேண்டிய பொறுப்பு தலைவர்களுடையது.

முழுமையான அதிகாரப் பகிர்வு எனக் கூறும் கூட்டமைப்பு அத்தீர்வை ஒரே தடவையில் பெற முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடம் தோற்றுவிக்கவில்லை. அது சாத்திய மில்லை என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். சமகால யதார்த்தத்தின் அடிப்படையில் முழுமை யான அதிகாரப் பகிர்வை ஒரே தட- வையில் பெற முடியாதென்பதால் தொடக்கப் புள்ளியாக ஏதாவதொரு தீர்வு வடிவத்தை ஏற்றாக வேண்டும். அது பற்றிக் கூட்டமைப்புத் தலைவர்கள் வாய் திறப்பதில்லை. முழுமையான அதிகாரப் பகிர்வு எனக் கூறுகின்ற போதிலும் அதில் விசுவாசமான ஈடுபாடு கூட்டமைப்புக்கு இல்லை என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தீர்வை முன்வைப்பதற்கு ஏன் தயங்குகின்றன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது.

கூட்டமைப்பில் கடைசியாக இணைந்த புளொட் அமைப்பைத் தவிர மற்றைய எல்லாக் கட்சிகளும் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணித் தலைவர்களும் சிறிது காலம் புலிகளின் நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டவர்கள். புலிகளின் ஆதரவாளர்களாக நாடாளுமன்றத்தில். பதவி வகித்தவர்கள். அப்போது ஏற்றுக் கொண்டிருந்த தனிநாட்டுக் கொள்கையை இப்போது முற்றாகக் கைவிட்டுவிட்டார்கள் எனக் கூற முடி யாது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு காண்பது பற்றிக் கூட்டமைப்பின் இரண்டு தலைவர்கள் பேசுகின்ற அதே வேளை, மற்றவர்கள் அது பற்றி எதுவும் பேசாமலிருப்பதும் பிரபா- கரன் தான் தனது தலைவர் என்று கூட்டமைப்பின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூறி வருவதும் மேற்படி கருத்தை உறுதிப்படுத்துகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லாத நிலை நீண்ட காலத்துக்கு நீடித்தால் பிரிவினை சாத்தியமாகும் என்பது சில புலம்பெயர் அமைப்புகளின் கனவு மாத்திரமல்ல, இரண்டு கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் மத்தியிலும் அந்தக் கனவு இருக்கின்றது. இவர்கள் தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமலிருப்பதற்கும் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளைக் குறைகூறி நிராகரிப்பதற்கும் இது பிரதான காரணமாகலாம். அரசியல் தீர்வுக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டாம் என்று சில புலம்பெயர் அமைப்புகளும் இவர்களுக்குக் கூறியிருப்பதாக ஒரு தகவல்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லாத நிலை தொடர்ந்தால் பிரிவினை சாத்தியமாகும் என்பது முட்டாள்தனமான சிந்தனை. இலங்கையில் பிரிவினை இடம்பெறுவதற்கு மூன்று வழிகளே உள்ளன. முதலாவது அரசாங்கத்தின் சம்மதத்துடன் இடம்பெறும் பிரிவினை. இது ஒருபோதும் சாத்தியமாகாது. இரண்டாவது ஆயுதப் போராட்டம். அது சாத்தியமில்லை என்பதையும் அழிவுகரமானது என்பதையும் அனுபவத்தில் கண்டுவிட்டோம். மூன்றாவது வெளிநாட்டுத் தலையீடு. இலங்கை பிளவுபடுவதை ஆதரிக்கும் நிலையில் எந்தவொரு வெளிநாடும் இல்லை. இலங்கை அரசாங்கத்துடன் நல்லுறவை வளர்ப்பதே இப்போது வெளிநாடுகளுக்குள்ள அக்கறை. இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்காக தமிழர் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் நிராகரித்திருந்தால் வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்பார்ப்பதில் நியா யம் உண்டு. நாங்கள் தான் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லையே. அரசாங்கத்தின் முயற்சிகளையும் நிராகரித்திருக்கின்றோமே.

இந்த இடத்தில் சுயநிர்ணய உரிமை பற்றியும் கொஞ்சம் கூறவேண்டும். சுயநிர்ணய உரிமையின் கீழ் பிரிவி னையைத் தவிர வேறு தீர்வு சாத்தியமில்லை என்று சில அரசியல்வாதிகள் மக்களை தவறாக வழி நடாத்துகின்றார்கள். சுயநிர்ணய உரிமையின் ஆகக் கூடுதலான தீர்வு பிரிந்து செல்லல். தவிர்க்க முடியாத காரணங்களால் அது சாத்தியமில்லை என்றால் மக்களுக்கு மாற்றுத் தெரிவு இருக்கவேண்டும். இந்த மாற்றுத் தெரி வைச் சரியான முறையில் கையாளத் த்வறினால் தமிழ் அரசியல் தேக்க நிலையை அடைந்துவிடும். முன்னேற்றம் எதுவும் இருக்காது.

இன்று பிரிவினை சாத்தியமில்லை. எனவே, மாற்றுத் தெரிவை நாடுவது தான் பிரச்சினைகளின் தீர்வுக்கான வழி. மாற்றுத் தெரிவுக்காகக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தமிழ்த் தலைமை தொடர்ச்சியாக நிராகரித்து வந்ததால் தமிழ் அரசியல் முன்னேற முடியாமல் ஸ்தம்பித நிலையில் இருக்கின்றது. இந்த நிலையிலிருந்து தமிழ் அரசி யலை மீட்டெடுப்பதற்குத் தலைவர்கள் முன்வரவேண்டும். அவர்கள் தயங்கினால் மக்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும். தமிழ் அரசியலின் தேக்க நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது.

**இலங்கை பிளவுபடுவதை ஆதரிக்கும் நிலை யில் எந்தவொரு வெளிநாடும் இல்லை. இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்காக தமிழர் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் நிராகரித்திருந்தால் வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்பார்ப்பதில் நியா யம் உண்டு. நாங்கள் தான் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லையே. அரசாங்கத்தின் முயற்சிகளையும் நிராகரித்திருக்கின்றோமே.**



# இன்னும் இல்லை நல்லாட்சி

(கொழும்பு)


என்னைப்பொறுத்தவரையில் இந்த நாட்டில் இன்னும் நல்லாட்சி ஏற்படவில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனம் திறந்து பேசியுள்ளார்.

கடந்த ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னர் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள போதும் நாட்டில் இன்னும் நல்லாட்சி அமையப்பெறவில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றனர். இதற்கு நான் இணங்க மாட்டேன். இன்னும் நல்லாட்சி ஏற்படவில்லை. ஆனால் நல்லாட்சிக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் ஆட்சி சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் எல்லாம் இல்லாது செய்யப்பட்டிருந்த நாட்டில் அவற்றை உடனடியாக கட்டியெழுப்ப முடியாது. என அவர் தெரிவித்துள்ளார்.

# தண்டனை கொடுத்த பின்னரே வழக்கு தொடுப்பு

## நல்லாட்சியில் விசித்திரம்




(கொழும்பு)

வழக்கு தொடர்ந்து தண்டனை கொடுக்கும் காலம் போய் தண்டனை வழங்கிவிட்டு வழக்குத் தொடரும் காலமே தற்போது காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வாரியபொல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னரென்றால் வழக்கு விசாரனைகளை நடத்தி அதன் பின்னரே சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போதைய ஆட்சியில் அப்படி நடக்கவில்லை முதலில் தண்டனை வழங்கிவிட்டு அதன்பின்னரே வழக்கு விசாரணைகளை மேற்கொள்கின்றனர். இதற்கு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோவின் கைதை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# உள்ளக விசாரணை ஆரம்பம் படை அதிகாரிகளிடம் துருவல்



இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இராணுவத்தின் உயரதிகாரிகளிடம் விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

அண்மையில் அரசாங்கத்தினால இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸிடம் உள்ளக விசாரணைக்குழு வாக்குமூலத்தைப் பதிவுசெய்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் அதிகளவு மனித உரிமை மீறல்களைப் புரிந்த படைப்பிரிவுக்கு இவரே தலைமைதாங்கினார் என்ற குற்றச் சாட்டும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

அத்துடன் நந்தன உடவத்த, கமல் குணரத்தன ஆகிய உயர் மட்ட இராணுவ அதிகாரிகளிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்று ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுமார் 3 மணித்தியாலங்கள் நடத்தப்பட்ட விசாரணைகளில் முககிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன என அறியமுடிகின்றது.

இவை குறித்த விபரங்கள் எதிர்வரும் ஓகஸ்டில் வெளிவரும் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மாத்திரம் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான மூவரடங்கிய விசாரணைக்குழுவின் பணிகளை, உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' விஸ்தரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கமையவே படைத்தரப்பிடமும் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்கு பரணகம குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

# புகைத்தல் ஒழிப்பு வாரம் இன்று முதல் ஆரம்பம்




சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்திற்கு சமாந்திரமாக நாட்டில் புகைத்தல் ஒழிப்பு வாரத்தை பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளது.

இதன்படி இன்று 31ஆம் திகதிமுதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை புகைத்தல் ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக களம் தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் பொலிஸ நிலையங்கள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களை இணைத்து மாகாண ரீதியில் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் புகைத்தலை கட்டுப்படுத்தும் வகையில் விசேட சட்ட திட்டங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நிதி நன்கொடை

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சபையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி உபுல் ஜயசூரியாவின் பணிகளை பாராட்டி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வழங்கிய 5000 அமெரிக்க டொலர் நிதியை இற்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர் காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவிற்கு கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு சட்டத்தரணிகள் சங்க கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு நடைபெற்றது.குறித்த காசோலை சட்டத்தரணி உபுல் ஜயசூரியவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அலகரத்ன- கலாநிதி தீபிக்கா உடகட உட்பட பல சட்டத்தரணிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சீனாவுடனான உறவு முறிக்க முடியாத பந்தம்



சீனாவுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான விஜேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் விஜேவர்தன, சீன உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.பாதுகாப்புச் செயலாளர் யூ.டி. பஸ்நாயக்கவும் இந்த சந்திப்பில் பங்கேற்றுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் இதன் ஓர் கட்டமாகவே அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனா விஜயம் செய்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூரில் நடைபெற்று வரும் பாதுகாப்பு மாநாட்டில் சீனா உள்ளிட்ட 26 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துறைமுகநகர உருவாக்கம் துருவி ஆராய புதிய குழு



கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை தொடர அனுமதிப்பதா என்பது குறித்து ஆராய புதிய குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த, இதுதொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

சீனாவின் 1.4 பில்லியன் டொலர் முதலீட்டில், ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை, தற்போதைய அரசாங்கம் கடந்த மார்ச் மாதம் இடைநிறுத்தியிருந்தது.

இந்த திட்டம் தொடர்பாக மீளாய்வு செய்யவும் குழு வொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழு திட்டத்தை தொடர்வதற்கு சாதகமாக அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையிலேயே, உயர்மட்ட அரச அதிகாரிகளைக் கொண்ட புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் செயலர் தலைமையிலான இந்த அதிகாரிகள் குழுவே, இடைநிறுத்தப்பட்ட துறைமுக நகரத் திட்டத்தை தொடர அனுமதிப்பதாக என்பது தொடர்பாக இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த திட்டத்தில் ஊழல் எதுவும் இடம்பெறவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஆனால் திட்டம் முறையான அனுமதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டதா என்ற கரிசனையே உள்ளதாகவும் அண்மையில், அமைச்சர் ஏரான் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## போக்குவரத்து சேவையை ஏற்படுத்தக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் வரை உள்ளூர் போக்குவரத்துச் சேவையொன்றினை ஏற்படுத்தித்தருமாறு முல்லைத்தீவு நகர அபிவிருத்திக்குழு மற்றும் முள்ளிவாய்க்கால் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறுதிப் போர் நடைபெற்று தற்போது மீள்குடியேற்றத்தின் பின் அடிப்படை வசதிகளை குறைவாகக் கொண்டுள்ள முள்ளிவாய்க்கால் மக்களுக்கு முல்லைத்தீவு நகரம் மற்றும் மாவட்டச் செயலகம், மருத்துவமனை பிரதேச செயலகம் என்பவற்றிற்கு பயணிப்பதில் நெருக்கடி நிலைமை காணப்படுவதன் காரணமாக முள்ளிவாய்க்காலுக்கான பேருந்து வசதியொன்றினை உருவாக்கித்தருமாறு அவ் வேண்டுகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

## மனவளர்ச்சி குறைந்தோரின் ஆயுட்காலம்

## மருத்துவ வளர்ச்சியால் அதிகரிப்பு

### வடமாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மனவளர்ச்சி குறைந்த பிள்ளைகளின் ஆயுட்காலம் குறைவாகவிருக்கும் என்பது விஞ்ஞானிகள், மருத்துவர்களின் கருத்துக் கணிப்பாகவிருந்தது. ஆனால் தற்போதைய மருத்துவ வளர்ச்சி காரணமாக அவர்களின் ஆயுட்காலம் நிச்சயமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன்.

யாழ்.கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையின் திறப்பு விழா அண்மையில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறப்பான கல்வி, ஒழுக்க விழுமியங்கள், ஆன்மீகச் செயறபாடுகள் என்பவற்றில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் மனங்களைக் குளிர்மைப்படுத்த முடியும்.

இதன் பயனாக அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதுடன் மாத்திரமன்றி ஆயுட்காலமும் அதிகரித்துச் செல்வதை நாங்கள் விஞ்ஞான ரீதியாக நோக்க முடியும்.

அந்த வகையில் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற்பயிற்சிக் கூடம் இந்த மாணவர்களுக்கு ஒரு கொடை என்றே கூற வேண்டும்.

தொழிற்துறையில் ஈடுபட வேண்டும் என்ற சிந்தனை இன்று பலர் மத்தியிலுமுள்ளது. மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சியை வழங்கி அவர்களை அந்தத் துறையில் வல்லுநர்களாக மாற்ற வேண்டும் என்கிற எண்ணம் இன்று உலகளாவிய ரீதியில் வலுப் பெற்றுள்ளது.

இந் நிலையில் இலங்கையில் கூடத் தொழிற்பயிற்சியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இவ்வாறான தொழிற்பயிற்சிகளூடாகக் கல்வியை வழங்குவதற்குப் பல்கலைக்கழகங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயற்படுகின்றன.

கல்வி ஆணைக்குழுக்கள் இது தொடர்பாகப் பல்கலைக் கழகங்களுக்குப் பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன.

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுப் பத்து வருடங்களின் பின்னர் தொழிற்பயிற்சிக் கூடமொன்று ஆரம்பித்துப் பிள்ளைகளிற்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க எடுத்த நடவடிக்கை பாராட்டுதற்குரியது.

ஆகவே இந் நிறுவனம் எதிர்காலத்தில் பாரிய தொழிற்பயிற்சி நிறுவனமாக மாற்றம் பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றார்.

இந்த விழாவில் கொழும்பு மனித நேயம் அமைப்பின் தலைவர் வி.கயிலாசபிள்ளை அபிராமி தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பல இலட்சம் ரூபா செலவில் நிர்மா்ணித்து வழங்கிய புதிய் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தனர். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கணககாளர் வைத்திலிங்கம் ஈழலிங்கம் தம்பதிகள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

## வங்கிக்கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் கொடிகாமக் கிளை நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு வங்கியின் உயர் அதிகாரிகளால் புதிய கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (11)

## பொது நூலக நினைவும் தாவீது அடிகள் தினமும்

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை காலை 9.15 மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் வண.பிதா தாவீது அடிகள் நினைவும் பொது நூலகம் பற்றிய உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு என்ற நூலும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நூலகத்தின் அங்கத்தவர்களையும், வாசிப்பதில் ஈடுபாடு கொண்டவர்களையும், சனசமூக நிலையங்கள், நூலகங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய இலவச வாசிகசாலை என்ற அமைப்பை முதலில் உருவாக்கிய நூலகத்தின் ஸ்தாபகர் புத்தூர் சக்கடத்தார் க.மு. செல்லப்பாவின் எண்ணத்தின் அடிப்படையில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது அமைப்பை உறுதிசெய்யும் கடிதத்தை வழங்கி நூலின் பிரதியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளது. (25)

## போதை வர்த்தகம் எங்கே நடக்கிறது

## அடையாளம் காட்டினால் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் விற்பனை செய்யும் இடங்கள், பாலியல் தொந்தரவு இடம்பெறும் பகுதிகள் என சில பகுதிகளை யாழ்.மாவட்ட செயலகம் அடையாளப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தொடர்பில் தமக்கு எவ்வித தகவலும் அலுவலக ரீதியில் வழங்கப்படவில்லை என வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித்.ஏ. ஜெயசிங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் போதைப் பொருள் மற்றும் பாலியல் சேஷ்டை பற்றிய செயலகத்தின் அறிவிப்புக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.செயலகத்தினால் ஊடகங்களுக்கு தெரிவித்த தகவலுக்கு நான் நடவடிக்கை எடுக்க முடியாது. இது தொடர்பில்



அவர்களைத்தான் கேட்கவேண்டுமே தவிர என்னை அல்ல இவ்வாறு நீங்கள் கூறும் இடங்கள், அறிக்கைகள் தொடர்பில் எனக்கு எந்த விதமான தகவலும்கிடைக்கவில்லை எனக்கு அனுப்பப்படவும் இல்லை.

இதற்கு நான் எப்படி நடவடிக்கை எடுப்பது. தகவல் ஊடகங்களில் வந்துள்ளதே தவிர எனக்கு எதுவும் வழங்கப்படவில்லை.

ஆனால் அவ்வாறான தகவல் வழங்கப்பட்டால் சட்ட நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் எனவும் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்தார். (இ,25)

## கிளி.நன்னீர் மீன் பிடியாளர் சங்கங்களுக்கு மானிய அடிப்படையில் மீன்பிடி வலைகள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நன்னீர் மீன்பிடியாளர் சங்கங்களுக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் உதவித்திட்டம் - மானிய அடிப்படையிலான மீன்பிடி வலைகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களில் தேசிய நீரியல் வளங்கள் அதிகாரசபையால் தெரிவு செய்யப்பட்ட 02 சங்கங்களுக்கு மானிய அடிப்படையில் மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் கிளிநொச்சி தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபையின் காரியாலயத்தில் இடம் பெற்றது.

நிகழ்விற்கு வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சரின் இணைப்பு செயலாளர் ப.ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை, தேசிய நீரியல் வளங்கள் அதிகார சபையின் மாவட்ட விரிவாக்கல் அதிகாரி எஸ்.சலீபன் ஆகியோரும் கலந்து நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு பொருட்களை வழங்கி வைத்தனர் அத்தோடு பிரதேச செயலக ரீதியாக மீன்பிடியாளர்களின் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மீன்குஞ்சுகள் வைப்பிலிடல் தொடர்பாகவும், எவ்வாறான மீன்குஞ்சுகள் வைப்பிலிடல் போன்ற விடயங்களை அமைச்சருக்கோ அல்லது தனக்கோ தெரியப்படுத்தும் பட்சத்தில் அவ் வேலைத்திட்டங்களை நடாத்த தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (160)

## பௌர்ணமி நாள் கருத்தமர்வு

(மீசாலை)

மீசாலை உயர் கலைக்கல்லூரியினரின் பௌர்ணமி நாள் கருத்தமர்வு 2 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை நடைபெறவுள்ளது.

க.பொ.த. உ/த 2015 கலைத்துறை மாணவர்களுக்கான தமிழ் இலக்கணம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடங்களுக்கு தோற்றும் மாணவர்களுக்கு தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞான பாடம் காலை 8.30 தொடக்கம் பி.ப 4 மணி வரையும் கணக்கியல் பாடம் பி.ப 1 மணி தொடக்கம் பி.ப 5 மணி வரையும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாணவர்கள் இலவசமாக பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இதில் 9 ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் நாளை திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழாவன்று காலை 7 மணிக்கு அபிஷேகம் பூசையுடன் ஆரம்பித்து தொடர்ந்து 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, 10 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி வெளி வீதியுலா வருதலும் 12 மணிக்கு பச்சை சாத்துதல் நடைபெற்று 1 மணிக்கு பிராயச்சித்த பூஜையும் இடம்பெறும். நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெறும். நிலாவரை புனித தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

❖ ❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வருணன் அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மணவாளக் கோலத்திருவிழா நடைபெறவுள்ளதோடு சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 08 ஆம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும், 9 ஆம் திகதி வைரவர் மடையும் நடைபெறுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (01)

# பிபாவின் தலைவராக மீண்டும் செப் பிளாட்டர்



(சூரிச்)

சர்வதேச கால்பந்து சுட்ட மைப்பின் (பிபா) தலைவராக 5ஆவது முறையாக செப் பிளாட்டர் தேர்வு செய்யப்பட் டார்.

சுவிட்சர்லாந்து தலை நகர் சூரிச்சில் பல்வேறு சர்ச்சை களுக்கு மத்தியில் 'பிபா' தலைவர் தேர்தல் நேற்று முன் தினம் நடந்தது. இதில், தற்போ தைய தலைவரான சுவிட்சர்லாந் தின் செப் பிளாட்டர், 79, மீண்டும் போட்டியிட்டார். இவரை எதிர்த்து ஜோர்டான் இளவரசர் அலி பின் அல்– ஹுசைன், 39, களம் கண்டார்.

கடந்த 17 ஆண்டுகளாக 'பிபா' தலைவராக ஆதிக்கம் செலுத்தி வரும் பிளாட்டருக்கு இம்முறை கடும் எதிர்ப்பு காணப்பட்டது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இவரது பதவிக் காலத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததாக புகார் எழுந்தன. எதிர்வரும் 2018 இல் ரஷ்யா, 2022 இல் கட்டாருக்கு உலக கோப்பை கால்பந்து தொடரை நடாத்த அனுமதி தந்ததில் முறைகேடு, தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமம் வழங்கியதில் ரூ. 984 கோடி வரை ஊழல் நடந்ததாக கூறப்பட்டது. இது தொடர்பாக, 'பிபா' நிர்வாகிகள் 7 பேர் சமீபத்தில் கைது செய் யப்பட்டனர்.

இந்த பரபரப்பான சூழலில் நேற்று முன்தினம் 'பிபா' தலைவர் தேர்தல் நடந்தது. 209 உறுப்பு நாடுகளில், முதல் சுற்றில் 140 வாக்குகள் பெறுபவர் வெற்றி பெறலாம். ஆனால், பிளாட்டருக்கு 133 வாக்குகள் தான் கிடைத்தன. ஜோர்டான் இளவரசர் அலி பின் அல்– ஹுசைன 73 வாக்குகள் பெற்றார்.

இதையடுத்து இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடக்க இருந்தது. இதற்கு முன் ஹுசைன் வாபஸ் பெறுவதாக அறிவித்தார். இதையடுத்து பிளாட்டர் 'பிபா' தலைவராக 5 ஆவது முறையாக தேர்வு செய்யப்பட்டார். இவர் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இப் பதவியில் நீடிப்பார்.

## தடைகளை தகர்த்த செப்பிளாட்டர்

கடந்த 1936 இல் சுவிட்சர் லாந்தில் பிறந்தவர் ஜோசப் செப் பிளாட்டர், 1979-1975 முதல் சர்வ தேச கால்பந்து சுட்டமைப் பில் (பிபா) பணியாற்றி வருகிறார். கடந்த 1975 81இல் 'பிபா' தொழில்நுட்ப இயக்குநராக செயற்பட்ட இவர், 1981–98இல் செயலாளராக இருந்தார்.

1998இல் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட இவர், முதன்முறை யாக தலைவரானார். பின், 2002, 2007, 2011இல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று தலைவர் பதவியை தக்கவைத்துக் கொண் டார். கடந்த 17 ஆண்டுகளாக தலைவராக ஆதிக்கம் செலுத்தி வரும் இவர், இம்முறையும் வெற்றி கண்டதன்மூலம் 5ஆவது முறையாக தலைவரானார்.

சமீபத்திய சர்ச்சைகள் காரண மாக 'பிபா' தலைவர் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும், பிளாட்டர் வெளியேற வேண்டும் என்று கோரிக் கைகள் எழுந்தன. இதனை எல்லாம் தகர்த்த இவர், மீண்டும் தலைவராக தேர்வு செய்யப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் 400 விக்கெட் வீழ்த்தினார் அன்டர்சன்



இங்கிலாந்து - நியூசிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையி லான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லீட்சில் நேற்று முன்தினம் மழை காரணமாக 3 மணி நேரம் தாமதமாக தொடங்கிய இந்த டெஸ்டில் நியூசிலாந்து முதலில் துடுப்பாட் டம் செய்தது. 3 ஆவது ஓவரி லேயே நியூசிலாந்து தொடக்க ஆட்டக்காரர் மார்ட்டின் குப்தில் (0), வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார்.

இது அண்டர்சனின் 400ஆவது டெஸ்ட் விக்கெட் ஆகும். தனது 104ஆவது டெஸ்டில் விளையாடும் அண்டர்சன், இந்த மைல்கல்லை எட்டிய முதல் இங்கிலாந்து பவுலர் என்ற சாதனையை படைத்தார். உலக அரங்கில் 400 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றியவர்களின் வரிசையில அவர் 12ஆவதாக இணைந்தார்

# வெடிபொருள் வைத்திருந்ததாக கூறி கிரிக்கெட் வீரர் பிளெட்சர் கைது

வெடிபொருள் வைத்திருந்த தாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் வீரர் அன்ட்ரே பிளெட்சர் டொமினிக்கோவில் உள்ள டக்ளஸ் சார்லஸ் விமான நிலையத்தில் கைது செய்யப் பட்டார்.

27 வயதாகும் பிளெட்சர் விண்ட்வார்ட் தீவு அணியுடன் பயற்சி மேற்கொண்டு பின்னர் நாடு திரும்புவதற்காக டொமினிக் கோவில் உள்ள டக்ளஸ் சார்லஸ் விமான நிலையத்திற்கு வந்தார்.

அப்போது அவர் வெடி பொருள் வைத்திருந்ததாக அதிகாரிகள் அவரை கைது செய்தனர். இந்த தகவலை டொமினிக்கன் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"பிளெட்சர் கைது செய்யப் பட்டதை அறிந்தோம். அவருக்கு நாங்கள் உதவி செய்வோம். அவரை விட்டுவிடமாட்டோம். இது என்னுடைய வேலை" என்று விண்ட்வார்ட் தீவு அணியின்



முகாமையாளர் லாக்ஹார்ட் செபஸ்டியான் கூறியுள்ளார்.

கிரேனடாவில் பிறந்த பிளெட்சர் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக 15 ஒருநாள் போட்டி, 22 ரி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். 2008-ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக களம் இறங்கிய இவர், கடைசியாக தென்னா பிரிக்காவிற்கு எதிராக டர்பனில் கடந்த ஜனவரி மாதம் ரி20 போட்டியில் விளையாடியி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

# மைதானத்துக்கருகே குண்டு வெடிப்பு தற்கொலைத் தாக்குதல் என சந்தேகம்

லாகூர் கடாபி மைதானத் துக்கு அருகே நேற்று முன் தினம் இரவு போட்டி நடை பெற்றுக் கொண்டிருக்க குண்டு வெடித் துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, 6 ஆண்டுகளுக்கு பிறகு சிம்பாப்வே கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. தற்போது இரு அணிகளும் ஒருநாள் போட்டித் தொடரில் விளை யாடி வருகின்றன. நேற்று முன் தினம் இரவு லாகூர் கடாபி மைதானத்தில் 2ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டி நடந்து கொண்டிருந்தபோது மைதா னத்தை நோக்கி ஆட்டோ ஒன்று வேகமாக வந்தது. அதை பொலிஸார் அப்துல் மஜீத் தடுத்து நிறுத்தினார். அப்போது ஆட்டோவில் இருந்து பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்



தது. இதில் அந்த போலிஸார் பலியானார். 3 பொதுமக்கள் காயம் அடைந்தனர். ஆட் டோவை ஓட்டி வந்த நபரும் பலியானார். கிரிக்கெட் போட் டியை சீர்குலைக்க ஆட்டோவில் குண்டுகளை நிரப்பி மைதானத்தில் தற்கொலை தாக்குதல் நடத்த சதி செய்திருப்பதாக கூறப்ப டுகிறது.

இதுகுறித்து லாகூர் பொலிஸ தலைமை அதிகாரி அமீன் கூறுகையில், 'இது தற்கொலை தாக்குதல் என்று கூறுவது தவறானது. ஆட்டோவில் இருந்த காஸ் சிலிண்டர் வெடித்து இருக கிறது. அதன் மாதிரிகளை சேக ரித்து இருக்கிறோம். இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது. இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கிரிக கெட் வீரர்களுக்கு கூடுதல் பாது காப்பு போடப்பட்டுள்ளது' என்றார்.

கடந்த 2009ஆம் ஆண்டு லாகூ ரில் இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது தீவிரவாதிகள் தாக்கு தல் நடத்தினர்கள். இந்தச் சம்ப வத்தை தொடர்ந்து பாகிஸ்தா னில் சர்வதேச போட்டிகள் நடை பெறவில்லை.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாட தயக்கம் காட்டினார்கள்.

# கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் பெடரர்

(பரிஷ்)

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றுக்கு சுவிட்சர்லாந் தின் ரோஜர் பெடரர் முன் னேறினார். பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் செர்பியா வின் அனா இவானோவிக், ரஷ்யாவின் மரியா ஷரபோவா உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ் லாம் டென்னிஸ் தொடர் நடக் கிறது. இதன் ஆண்கள் ஒற்றை யர் பிரிவு மூன்றாவது சுற்றில், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், போஸ்னியாவின் டாமிர் டிஜுமஹர் மோதினர். அபாரமாக ஆடிய பெடரர் 6:4, 6:3, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 3ஆவது சுற்றுப் போட்டியில் பிரான்சின் ரிச்சர்டு காஸ்குயட் 3:6, 6:3, 6:1, 4–6, 6:1 என்ற செட் கணக்கில் ஆர் ஜென்டினாவின் கார்லோஸ் பெர்லாக்கை தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் சுவிட் சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா 6:4, 6:3, 6:2 என்ற நேர் செட் கணக்கில் அமெரிக் காவின் ஸ்டீவ் ஜோன்சனை வீழ்த்தினார். மற்ற போட்டியில் பிரான்சின் கில்லஸ் சைமன், சகவீரர் மஹத்தை 6:2, 6:7, 6:7, 6:3, 6:1 என போராடி வென்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் செர்பியா வின் அனா இவானோவிக் குரோஷி யாவின் டோனா வேகிக் மோதினர். இதில் அசத்தலாக



ஆடிய இவானோவிக் 6:0, 6–3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற் றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு 3ஆவது சுற்றில், ரஷ்யாவின் எகடரினா மகரோவா 6–2, 6–4 என்ற நேர் செட் கணக் கில் சகநாட்டை சேர்ந்த எலினா வெஸ்னினாவை தோற்கடித்தார்.

மற்ற 3ஆவது சுற்றுப் போட்டி களில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செக்குடியரசின் லூசி சபரோவா, பிரான்சின் அலைஸ் கார்னட், ஸ்பெயினின் கார்பைன் முகுருசா, உக்ரைனின் எலினா ஸ்விடோலினா உள்ளிட்டோர் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு 2ஆவது சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், கனடாவின் டேனியல் நெஸ்டர் ஜோடி 7–6, 6–2 என்ற நேர் செட் கணக்கில் ஜெர்மனியின் ஆன்ட்ரி பெகிமன், அவுஸ்ரேலியாவின் ஜுலியா நோவல் ஜோடியை தோற்கடித்தது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், சுவிட்சர் லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி 6–2, 6–3 என்ற நேர் செட் கணக்கில் ரஷ்யாவின் கட் ரியாசேவா, கொலம்பியாவின் ஜுயன் செபாஸ்டியன் கபால் ஜோடியை வீழ்த்தியது.

பெண்கள் இரட்டையர் பிரிவு 2ஆவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந் தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி 6–3, 6–4 என்ற நேர் செட் கணக்கில் பிரான்சின் கிட்டே பானி போர்ட்ஸ், அமான்டின் ஹெசி ஜோடியை வீழ்த்தியது.

ஆண்கள் இரட்டையர் பிரிவு 2ஆவது சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, ருமேனி யாவின் புளோரின் மெர்ஜியா ஜோடி 3–6, 6–3, 7–5 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் டொனால்டு யங், கிராஜிசக் ஜோடியை வென்றது

## கரப்பந்தாட்டம்

# மாவட்ட சம்பியனானது ஆவரங்கால் இந்து இளைஞர்



(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

மேற்படி போட்டி கடந்த புதன்கிழமை சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் மோதிய 5 சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

இரு அணிகளும் ஆக்ரோசமா மோதிக்கொண்ட முதல் சுற்றுப் போட்டியின்ஆட்ட நேர முடிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாம் சுற்று ஆட்டத்திலும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியே 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (93)

## தடகள விளையாட்டுப் போட்டி இணுவில் கலையொளி முதலிடம்

உடுவில் பிரதேச செயலாளர பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப்போட்டிகள் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவ்ரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் முதலாம் இடத்தை இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகமும் இரண்டாம் இடத்தை மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் மூன்றாம் இடத்தை இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் பெற்றுக கொண்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வட மாகாணசபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், பாலச்சந்திரன் கஜதீபன் மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத தலைவர் தியாகராசா பிரகாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இறுதிப் போட்டியில் றோயல் எதிர் விண்மீன்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட கால் பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஊரெழு றோயலும் பலாலி விண்மீனும் மோதவுள்ளன.

அரையிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியின் ஆதிக்கமே காணப்பட்டது.

மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி கோல்களைப் பெறுவதற்கு பல தடவை முயற்சித்த போதும் அவ் அணியால் ஆட்ட நேர முடிவுவரை ஒரு கோலைக் கூடப் போடமுடியவில்லை. இதனால் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியும் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவிருந்தன ஆனால் சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகஅணியினர் போட்டிக்கு சமுகம் தராமையினால் பலாலி விண்மீன் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு இறுதிக்குத் தெரிவானது.

ஊரெழு றோயலும் பலாலி விண்மீனும் மோதவுள்ள இறுதிப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது (93)

## வல்வை கணபதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி

வல்வை கணபதி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் நடை பெறவுள்ளது.

கணபதி பாலர் பாடசாலை தலைவர் பூ.அகமணிதேவர் (J.P) தலைமையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக தி.கருணைநாதன் திருநெல்வேலி விவசாயத் திணைக்களம் ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு அனைவரையும் வருகை தருமாறு பாலர் பாடசாலை சமூகத்தினர் அழைக்கின்றனர்.

## விளையாட்டு மைதானத்திற்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்


(மன்னார்)

மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள விளையாட்டு மைதானத்துக்கான புனர் நிர்மாணப்பணிகள் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரரும் ஐக்கிய தேசியக்கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளருமான உனேஸ்பாரூக்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் ஏற்பாட்டில் அம்பாள்புர விளையாட்டு மைதானத்தின் ஆரம்பகட்ட புனர்நிர்மாண வேலைக்காக 625000 ரூபா செலவிலும் மீனவர் சங்கத்தின் கட்டட புனர்நிர்மாணத்திற்காக 625000 ரூபாவும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளருமான உனேஸ் பாரூக்கின் விசேட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு இதற்கான ஆரம்பகட்டப் பணிகளை வைபவ ரீதியாக கடந்த புதன் கிழமை ஆரம்பித்து வைத்துள்ளார். (40)

## விளையாட்டு மைதானத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது






மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் கொல்ல விளாங்குளம் விளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரனின் ஏற்பாட்டில் கொல்ல விளாங்குளம் விளையாட்டு மைதானத்திற்கு 10,00000 ரூபா செலவிலும் கொல்ல விளாங்குள வீதி புனரமைப்புக்காக 25 0000 ஒட்டறுத்தகுளம் வாசிகசாலைக்காக 1,25,000 செலவில் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் விசேட நிதியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான உனேஸ் பாரூத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனர்நிர்மாண வேலைகளுக்கான ஆரம்பகட்டப் பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)







நீலங்களின் சமர் 2015 நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியினர் களத்தடுப்பைத் தெரிவு செய்து விளையாடினர். முதல் துடுப்பாட்டத்தில் மத்திய கல்லூரி அணியினர் 39.1 ஓவரில் 75 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தனர். தொடர்ந்தாடிய இந்துக்கல்லூரி அணியினர் 44.2 ஓவரில் 118 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர் (160)

# யாழ்ப்பாண சம்பவங்கள் - ஒரு எச்சரிக்கை மணி

**('சிலோன் ருடே') சுலோச்சனா ராமையா மோகன் கட்டுரையிலிருந்து**



கடந்த வாரம் புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டு படு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நீதிமன்றம் மற்றும் காவற்துறையினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது.

இந்தச் சம்பவமானது பாது காப்பை உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கையை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எச்சரிக்கை மணியை எழுப்பியுள்ளது.

இளையோர்கள் பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஒரு நடைமுறைச் சாத்தியமான தீர்வை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வடக்கில் அதி கரித்து வரும் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைப்பதற்குமான அவசியத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது.

போரின் பின்னான காலப்பகுதி யில், வடக்கிலுள்ள இளைஞர்கள் தமக்கான பாதையைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை இழந் துள்ளனர். கஞ்சாவைப் புகைத் தல், போதைப்பொருட்கள் மற்றும் மிகமோசமான மதுபானங்களைப் பாவித்தல் போன்ற பல்வேறு இழிந்த செயற்பாடுகளில் இளை ஞர்கள் ஈடுபடுவது தற்போது அதிகரித்துள்ளது.

நவீனமயமாக்கல் எவ்வித பொருத்தமான இலக்குமின்றி மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் அரசியல்வாதிகள் தமது அதிகாரப் போட்டிகளுக்காக நலிவுற்ற மக்களைப் பயன்படுத்துகின்றனர்.

வேலையில்லாப் பிரச்சினை, இப்பிராந்தியத்தில் நிலவும் சரிவடைந்த பொருளாதாரம், புத்துணர்ச்சியை வழங்கக் கூடிய செயற்பாடுகள் நடைமுறையில் இல்லாமை, வழிகாட்டல் இல்லாமை போன்ற பல்வேறு காரணிகள் நாட்டில் போர் நிறைவுற்ற பின்னர் தமிழ் சமூகத்தின் மீது பாதிப்பைச் செலுத்தியுள்ளன.

யாழ்ப்பாண நகரில் காணப் படும் ஐந்து திரையரங்குகளில் இளைஞர்கள் குழுமுகின்றனர். அதேசமயம் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாடக மன்றங்கள் உள்ளன. ஆனால் இவற்றில் ஒரு சிலரே ஆர்வமாகப் பங்கேற்கின்றனர்.

கலாசார சார் செயற்பாடுகள் ஆதிக்கம் செலுத்தும் போது இவ்வாறான துர்நடத்தைகள் சமூகத்தில் ஒருபோதும் இடம்பெறமாட்டாது.

இளைஞர்கள் காலை தொடக் கம் மதியம் வரை அரட்டையடித் தவாறு பொழுதைக் கழிப்பதை யும் மதிய உணவின் பின்னர் கடற்கரையில் இருந்தவாறு தம்மைக் கடந்து செல்வோருடன் வம்பிழுக்கின்ற காட்சிகள் இன்று ஒரு பொதுவான காட்சியாகக் காணப்படுகிறது.

இப்பத்தியின் எழுத்தாளர் அண்மையில் பருத்தித்துறைக்குச் சென்றிருந்த போது, அங்கிருந்த இளைஞர் குழு ஒன்றிடம் ஏன் அங்கு நிற்கிறீர்கள் எனக் கேட்டபோது "செய்வதற்கு எதுவுமில்லை. அதுதான் இங்கு நிற்கிறோம்" என அந்த இளை ஞர்கள் பதிலளித்திருந்தனர்.

"போருக்குப் பின்னர் ஓய்வெ டுத்தல் அல்லது சமாதானத்தின் பயன்களை அனுபவித்தல் என்பது தற்போதும் தொலைதூரக் கனவாகவே உள்ளது" என நாடகக் கலைஞரும் தொன்மைக்கால கலை களின் தொலைநிலைக் கல்விக்கான இயக்குநரு மான பாசையூரைச் சேர்ந்த வசந்த் தெரிவித்தார்.

"எமது நாடகங்கள் மூலம் வன்புணர்வு தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு வழங்கு தல், பெண்களை மதித்தல், அறநெறிகளைப் பின்பற்றுதல் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் வழங்குகின்றோம். எனினும் இது மட்டும் போதாது. இதற்கப்பால் இன்னமும் செய்யவேண்டியுள்ளது" என வசந்த் தெரிவித்தார்.

கலாசாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், இசை நிகழ் வுகள், நடன நிகழ்வுகள் மற்றும் நாடகங்கள் போன்றவற்றில் இளையோர்களைப் பங்குபற்ற வைத்தல் போன்றன இளை யோர்களின் வாழ்வில் சுவாரசியத்தை வழங்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

பகல் நேரத்தில் யாழ்ப்பாண நகரம் சுறுசுறுப்பாக இயங்கு கிறது. ஆனால் பி.ப ஆறு மணிக்குப் பின்னர் அனைத்துச் செயற்பாடுகளும் முடிவுக்கு வருகின்றன. இதன் பின்னர் இங்கு எவ்வித செயல்களிலும் ஈடுபட முடியவில்லை என தன்னை அடையா- ளங் காண்பிக்க விரும்பாத முச்சக்கரவண்டி ஓட்டுநர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வியானது மனிதர்களுக்கு முதன்மையான மற்றும் தேவை யான சிந்தனையைத் தூண்ட உதவுவதாக கல்விமான்கள் கூறுகின்றனர். எனினும், இளை ஞர்களின் ஆளுமையை வளர்ப் பதற்கான பயனுள்ள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு உறவைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உண்டு.

இதற்காக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வடக்கிலுள்ள இளைஞர்கள் காத்திரமான வாழ்வொன்றைத் தெரிந் தெடுப்பதற்கான ஆக்கபூர்வ உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கில் சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்படும்போது இங்கு தொழில் வாய்ப்பு அதிகரிக்கப் படும். இதற்கான திட்டங்கள் வரையப்பட வேண்டும். தெற்கி லுள்ளவர்களே வடக்கில் இவ் வாறான பணிகளில் ஈடுபடுத் தப்படுகின்றனர். வடக்கிலுள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு சுற்றுலாத் துறையுடன் தொடர்பு பட்ட பணிகளை வழங்கும் போது இது சுற்றுலாத்துறையையும் முன்னேற்றமடையச் செய்யும்.

யாழ்ப்பாணத்திலும் பல்வேறு கடற்கரைகள், பனைமரங்களைக் கொண்ட இடங்கள், கோவில் கள் போன்ற பல்வேறு தனிச் சிறப்பு வாய்ந்த இடங்கள் காணப்படுவதால் இவற்றை உள்ளடக்கி சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதுடன் இவற்றுடன் தொடர்புபட்ட பணிகளில் வடக்கில் வாழும் வேலையற்ற இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

அரசியல்வாதிகளால் தீர்வு காணமுடியாத சில முக்கிய பிரச்சினைகளுக்கு துப்பாக்கி களைப் பயன்படுத்தித் தீர்வு காண்கின்ற நிலை தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே இதற்கான காத்திரமான, ஆக்கபூர்வமான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

---

# தேசப்பற்றும் அரசியலும்

**– எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.**

போர் முடிவடைந்தமையினால் நாட்டில் ஒரு சாரார் மட்டும் பயனடைந்ததாக கூற முடியாது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் களுக்கு நியாயம் வழங்குவதில் பல சிக்கல் கள் இருந்த போதிலும் இன்று நாட்டில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் உயிரச்சம் இல்லாமல் வாழ்கிறார்கள் என்பது உண்மை.

புலிகள், பஸ்களில் குண்டு வைப்பார்கள் என தெற்கே மக்கள் அஞ்சுவதில்லை. அதே போல் புலிகள் தமது பிள்ளைகளை பிடித்துக் கொண்டு போவார்கள் என்றோ அல்லது விமானப் படையினர் விமானக் குண்டு போடுவார்கள் என்றோ வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அஞ்சுவதுமில்லை.

எனவே, சகல இன மக்களும் போர் முடிவினால் பயனடைகிறார்கள். ஆனால் அந்த மக்கள் அனைவருக்கும் ஓரிடத்தில் இருந்து இதனை ஒரு வெற்றியாக கொண்டாட முடியாத நிலையே காணப்படுகிறது.





குறைந்த பட்சம் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்குமாவது அதனை ஒற்றுமையாக கொண்டாட முடியாது.

அதேவேளை, போர் வெற்றி யென்பது தமிழர்களும் பயன் பெறக்கூடியதே என்பதை அம் மக்களுக்கு உணர்த்த அரசாங்கங் களால் முடியாமல் போயுள்ளது.

இன்று இந்த ஞாபகார்த்தங்கள் மிக மோசமான முறையில் அரசியலாக் கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

வடக்கில் நிலைமையும் ஏறத்தாழ இதைப் போன்றதாகவே இருக்கிறது. வடக்கில் கடந்த 19ஆம் திகதி போரில் இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. புலிகளுக்காக நினைவஞ்சலி செலுத்தக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலை யிலேயே இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்ச்சிகளின் போது தாம் போரில் இறந்த தமது உறவினர்களையே நினைவுகூர்ந்ததாக தமிழ்த் தலைவர்கள் கூறினர். அவ்வாறாயின் புலிகளுக்கு நினை வஞ்சலி செலுத்துவது பிழையானது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அத் தலைவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

இரண்டு முறை கிளர்ச்சிகளை நடத்திய மக்கள் விடுதலை முன்னணி அக் கிளர்ச்சி களின் போது உயிரிழந்த தமது போராளி களை நினைவு கூர முடியும் என்றால், வட பகுதி மக்கள் போரில் இறந்த போராளிகளை நினைவு கூருவதில் என்ன தவறு இருக்கிறது என தமிழ்த் தலைவர்கள் முன்பு கேள்வி எழுப்பியிருந்தனர்.

இது பலமான வாதமாக இருந்த போதிலும் தாம் அஞ்சலி செலுத்துவது புலிப் போராளி களுக்கு அல்ல, உறவினர்களுக்கே என்ற வாதத் துக்கு இது முரணாக இருப்பதாக தெரிகிறது.

ஒரு வகையில் இந்த விடயத்தில் தமிழ் தலைவர்களுக்கு மக்கள் விடுதலை முன்ன ணியை உதாரணமாக எடுக்க முடியாது. ஏனெ னில், அக் கட்சி தடை செய்யப்படாதிருந்த காலத்தில் அக் கட்சியினருக்கும் அவர்களது பின் செயற்பாடுகளோடு தடை செய்யப்படாத மற்றொரு அமைப்பின் செயற்பாடுகளை ஒப்பிட முடியாது.

வட பகுதியில், வருடத்துக்கு இரண்டு முறை போரில் இறந்தவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள். ஒன்று பிரபாகரன் மரணம டைந்து போர் முடிவடைந்த மே 19 ஆகும். மற்றைய தினம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி யாகும். இது புலிகள் ஆயுதப் போராட்டத்தின் போது கொல்லப்பட்ட தமது முதலாவது உறுப்பினரை நினைவு கூரும் நாளாகும்.

அன்றும் தமிழ் மக்கள் புலிகளை நினைவு கூரவில்லை, தமது உறவினர்களையே நினைவு கூர்கிறார்கள் என தமிழ்த் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அன்றைய தினம் புலிகளால் தமது சகாக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக குறிக்கப்பட்ட நாளாகும்.

எனவே, தமிழ் மக்கள் புலிகளுக்குத் தான் இந்நாட்களில் அஞ்சலி செலுத்துகிறார்கள் என தெற்கில் எவரும் வாதிட்டாலும் அதில் பிழை ஏதும் இல்லை.

புலிகளின் இலட்சியமான தமிழீழம் என்பது தற்போதைய பூகோள அரசியல் சூழலில் அடைய முடியாத ஒன்றாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால் இந்தியா ஒரு போதும் தமிழ் ஈழம் உருவாக இடமளிக்கப் போவதில்லை.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தவி சாளர் அத்துரலியே ரத்தன தேர் அரசாங்கம் போர் வெற்றியை கொண்டாடிய மாத்தறை வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

அன்றே தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றின் போது அவர் தெற்கிலும் வடக்கிலும் நடைபெறும் இது போன்ற நினைவஞ்சலிக் கூட்டங்கள் தற்போதைய நிலையில் அர்த்தமற்றவை என்றார்.

இவை மென்மேலும் மக்களை பிரித்துவிடும் என்று கூறிய அவர் இன்று செய்ய வேண்டி யது இரு தரப்பிலும் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக இரு சாராரும் கூட்டாக பிரார்த்திப் பதும் இரு சாராருக்குமிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டு பிடிப்பதுமே என்றும் கூறினார்.

"சிங்கள இனவாதத்தைக் கொண்டு

வெளிப்படுத்தியது. அதுதான், மக்கள் இவ்வளவு ஆக்ரோஷ

இழிந்த செயற்பாடுகளில் இளை ஞர்கள் ஈடுபடுவது தற்போது வம்பிழுக்கின்ற காட்சிகள் இன்று ஒரு பொதுவான காட்சியாகக் வருகின்றன. இதன் பின்னர் இங்கு எவ்வித செயல்களிலும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

...இது முரணாக இருப்பதாக தெரிகிறது. ஒரு வகையில் இந்த விடயத்தில் தமிழ் தலைவர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியை உதாரணமாக எடுக்க முடியாது. ஏனெனில், அக் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் அக் கட்சியினருக்கும் அவர்களது உயிரிழந்த சகாக்களை நினைவு கூர அரசாங்கம் இடமளிக்கவில்லை. எனவே, தடை செய்யப்பட்ட ஓர் அமைப்...

...யது இரு தரப்பிலும் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக இரு சாராரும் கூட்டாக பிரார்த்திப்பதும் இரு சாரார்க்குமிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டு பிடிப்பதுமே என்றும் கூறினார்.

வடக்கிலும் தெற்கிலும் நினைவஞ்சலிகள் அரசியலாக்கப்பட்டுள்ள நிலைமையை பார்க்கும் போது தேரர் கூறுவது உண்மை என்றே தோன்றுகிறது.

# நீங்கள் ஸ்மார்ட்போன் அடிமையா?



இது ஸ்மார்ட்போன்களின் காலம் என்பதில் சந்தேகமில்லை. முன்னணி செல்போன் நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு புதிய மாதிரி ஸ்மார்ட்போன்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கின்றன. ஸ்மார்ட்போன்களின் எண்ணிக்கை மட்டும் பெருகவில்லை. அவற்றின் ஆற்றலும் கணிசமாக அதிகரித்து வருகிறது. அது போல பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் வெகுவேகமாக அதிகரித்து வருகிறது.

உங்கள் ஸ்மார்ட்போன் பயன்பாடு அளவுக்கு அதிகமாக இருக்கிறதா என்பதை அறிய விருப்பமா? அதற்காக என்று ஒரு விநாடி வினாவை http://virtual-addiction.com/smartphone-abuse-test/ இணையத்தளம் வழங்குகிறது. இதில் உள்ள கேள்விகளுக்குப் பதில் அளித்து நீங்கள் ஸ்மார்ட்போன் அடிமையா என தீர்மானித்துக்கொள்ளலாம். இணையம் மற்றும் தொழில்நுட்ப மோகத்துக்கு எதிரான அமைப்பு நடத்தி வரும் இணையத்தளம் இது.

சுருக்கமாகச் சொன்னால், இரவு படுக்கச் செல்லும் முன்பும் காலையில் கண் விழித்த பிறகும் ஸ்மார்ட்போனை எடுத்துப் பார்க்கும் வழக்கம் இருந்தால் ஸ்மார்ட்போனுக்கு அடிமையாகி விட்டோம் என்று பொருள்.


## நல்ல தமிழில் எழுத வேண்டுமா?

| | |
|---|---|
| சொல்லுதல் | சுருக்கமாய்க் கூறுதல் |
| பேசுதல் | நெடுநேரம் உரையாடுதல் |
| கூறுதல் | கூறுபடுத்திச் சொல்லுதல் |
| சாற்றுதல் | பலரறியக் கூறல் |
| பன்னுதல் | திரும்பத் திரும்பச் சொல்லுதல் |
| கொஞ்சுதல் | செல்லமாகச் சொல்லுதல் |
| பிதற்றுதல் | பித்தனைப் போல் சொல்லுதல் |
| ஓதுதல் | காதில் மெல்லச் சொல்லுதல் |
| உளறுதல் | ஒன்றுக்கொன்று மாற்றிச் சொல்லுதல் |
| கழறுதல் | கடிந்து சொல்லுதல் |
| விளம்புதல் | பலர் அறியச் சொல்லுதல் |
| செப்புதல் | விடை சொல்லுதல் |
| மொழிதல் | திருத்தமாகச் சொல்லுதல் |
| இயம்புதல் | இனிமையாகக் கூறல் |
| வற்புறுத்தல் | அழுத்தமாகக் கூறல் |

(அ.கி.பரந்தாமனாரின் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' நூலிலிருந்து)

# ஊடகங்களின் இனவாத அத்துமீறல்

– புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.



"சிங்கள இனவாதத்தைக் கொண்டு தமிழ் இனவாதத்தை தோற்கடிக்க முடியாது." எனத் தொனிப்படும் கருத்தை மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த அண்மையில் வெளியிட்டிருந்தார்.

அத்தோடு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தன்னுடைய அரசியல் தேவைகளுக்காக தெற்கில் சிங்கள இன வாதத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாகவும் அவரால் வடக்கிலோ- கிழக்கிலோ- மலையகத்திலோ நீண்டுள்ள மற்றொரு இனவாதத்தை வெற்றி கொள்ள முடியாது என்றும் தெரிவித்திருந்தார்.

கே.டி.லால்காந்தவின் மேற்கண்ட கூற்றில் குறிப்பிட்டளவு உண்மையிருக்கின்றது. ஆனால், ஓர் இன வாதத்தைக் கொண்டு இன்னொரு இனவாதத்தைத் தோற்கடிப்பது பற்றி, ஆட்சியதிகாரம் நோக்கி நகரும் அரசியல்வாதிகள் என்றைக்குமே கவனத்திற் கொள்வதில்லை.

மாறாக, இனவாதத் தீக்கு தொடர்ந்தும் எவ்வாறு எண்ணெய் ஊற்றி கொழுந்துவிட்டு எரிய வைப்பது என்றே சிந்தித்து செயலாற்றி வந்திருக்கின்றார்கள். இலங்கையில் வாக்கு அரசியல் தீர்க்கமான இடத்தை வகிக்கும் வரை இதுதான் நிலைமையாக தொடரப்போகிறது.

தமிழ் இனவாதமும் முஸ்லிம் இனவாதமும் சிங்கள இனவாதத்துக்கு எந்த வகையிலும் சளைத்தவை அல்ல. பிரித்தானியா, இலங்கையில் சுதந்திரம் பற்றிய பேச்சுக்களை ஆரம்பித்த தருணத்திலேயே "அரசியல் அதிகாரங்களை பகிர்ந்து தமது தேசியங்களின் இருப்பைக் காப்பாற்றுதல்" எனும் விடயம் முன்னிலை பெற்றது.

அதில், எந்தத் தப்பும் இல்லை. ஆனால், தேசியத்தின் இருப்பை தக்க வைப்பதற்கு இனவாதமே சிறந்த தெரிவு என்று சிந்திக்கத் தலைப்பட்ட இடமே, இலங்கை அரசியலில் இனவாதம் என்றைக்குமே தோற்கடிக்க முடியாத சக்தியாக ஓங்கி நிற்பதற்கு காரணமானது. இனவாத அரசியலின் கோலோச்சுகை இந்த நாட்டு மக்களுக்கு இன, மத வேறுபாடின்றி பேரழிவுகளைத் தந்திருக்கின்றது.

கடந்த வாரம் முழுவதும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதி பெரும் கோபத்தினால் சூழப்பட்டிருந்தது. புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வுக்குப் பின் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மக்களின் கோபத்தினை பெருமெடுப்பில் வெளிப்படுத்த வைத்தது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்கிற கோஷம், அந்த மக்களுக்குள் ஏற்கெனவே இருந்த கோபத்தை தீயாக வெளிப்படுத்தியது. அதுதான், மக்கள் இவ்வளவு ஆக்ரோஷமாக ஒருங்கிணைவதற்கான காரணமாகவும் அமைந்தது.

அது, ஆட்சி மாற்றத்துக்குப் பின் கிடைத்திருக்கின்ற சிறு ஜனநாயக(!) இடைவெளியை பெருவாரியாக கையாள வைத்திருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்திருந்தால், வித்தியாவின் படுகொலைக்கு எதிராக தமிழ் மக்கள் இவ்வளவுக்கு கிளர்ந்தெழுந்திருப்பார்களா?, என்கிற கேள்வி பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது. அந்தக் கேள்வி தர்க்க ரீதியில் சரியானது என்கிற எண்ணப்பாடும் பலரிடம் உண்டு.

அப்படியான நிலையில், ஆற்றாமையுடன் அமைதியாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போது வெளிப்பட்ட கோபம் அவசியமானது. அதை யாராலும் நிராகரித்துவிட முடியாது.

எனினும், வடக்கின் அண்மைய கோபத்துக்குப் பின்னாலுள்ள பிழை என்னவென்றால், அதீத உணர்வெழுச்சி வெளிப்பாட்டை மற்றவர்கள் கையாள அனுமதித்ததிலும் யதார்த்த களத்தின் போக்கினை புத்திசாதுரியமாக எதிர்கொள்ளாமல் தவிர்த்ததிலும் இருக்கின்றது.

தமிழ் மக்கள், வன்முறைகள் மீது ஆர்வம் கொண்ட சமூகம் என்கிற சாயம் திட்டமிட்டு பூசப்பட்டிருக்கின்றது.

அஹிம்சை வழிப் போராட்டங்களில் ஈடுபாடு கொண்ட சமூகத்தை ஆயுத வழிக்கு திருப்பி விட்ட சக்திகளே அந்த சாயத்தை பூசி விட்டிருக்கின்றன என்பதும் வேதனையானது.

அப்படியிருக்கின்ற நிலையில், எமது உணர்வெழுச்சி வேகம் நாட்டின் நடைமுறைகளை புறந்தள்ளுவதாக அமைகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களும் எமக்கான தோல்விகளை வழங்கும். அல்லது, அதனை மற்றவர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்களை வழங்கும்.

வித்தியாவின் படுகொலைக்கு நீதி கோருவது மக்களின் பொறுப்பு. ஆனால் அந்த பொறுப்பு, சட்டங்களை புறந்தள்ளிவிட்டு கிடைத்துவிடாது.

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாம் இன்னமும் இலங்கையின் குடிமக்களாகவே இருக்கின்றோம்.

அதுபோக, ஜனநாயகப் படுத்தப்பட்டுள்ள சமூக அமைப்பில் நீதி கோருதலுக்கான நெறி முறைகள் உண்டு. அது, நீதிமன்றத்தை தாக்குமளவுக்கு செல்ல முடியாது. இன்றுள்ள சூழ்நிலையில், போராட்ட வடிவத்தை மாற்றி களம் காண வேண்டிய அவசியத்திலிருக்கிற தமிழ் மக்கள், உணர்வெழுச்சியை எல்லைகளற்ற நிலையில் முன்னெடுப்பது ஆபத்தானது.

இன்னொரு புறம், வித்தியாவின் படுகொலைக்கு நீதி கோரிய மக்களின் உணர்வெழுச்சியை தமிழ் இணைய ஊடகங்கள் பல, தமிழீழ போராட்டத்துக்கான அடுத்த கட்டமாக முன்னிறுத்தி குளிர்காய்ந்தன. இணைய ஊடகங்களின் அத்துமீறல் என்பது எதிரிகளை தாண்டி அச்சுறுத்தல் விடுக்குமளவுக்கு அதிகரித்திருக்கின்றது.

இந்தப் போக்கு, எமது மக்களின் நடவடிக்கைகளை இன்னும் மோசமான கட்டத்துக்கு நகர்த்திக் கொண்டிருக்கின்றது. ஊடகப் பொறுப்புணர்வு, தார்மிகம் பற்றியெல்லாம் கவலையில்லாத சமூகமாகவும் இந்த ஊடகங்கள் மக்களை வளர்த்து விடுகின்றன.

அதற்கு வித்தியாவின் படுகொலை விடயத்தை சமூக ஊடகங்களில் தமிழ் சமூகம் கையாண்ட விதம் வெளிப்படையாக பிரதிபலித்தது.

சிங்கள கடும்போக்கு ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் வடக்கு உணர்வெழுச்சியை ஆயுத முனைப்பு போராட்டங்களாக சித்தரிக்க ஆரம்பித்தன. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டங்கள் பொலிஸ் நிலையங்களைத் தாக்கிய தோடுதான் ஆரம்பித்தன. இப்போது, நீதிமன்றம் தாக்கப்படும் விதமும் அதனையே பிரதிபலிக்கின்றது என்றெழுதின.

"சிங்கள நாட்டில் சிங்களவர்கள் நீதிமன்றதுக்கு கல்லெறிந்தது கிடையாது. ஆனால், வடக்கில் மாத்திரம் ஏன் அவ்வாறு நடக்கின்றது. நாட்டில் நல்லாட்சி நடைபெறுகின்றது என்கிறீர்கள்?" என்று ஊடகவியலாளர் ஒருவர் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்பினார்.

இதனால் ஆத்திரமடைந்த நீதியமைச்சர், குறித்த ஊடகவியலாளரை நோக்கி, "உங்களுடைய கேள்வியிலேயே இனவாதம் இருக்கின்றது. பொறுப்பற்ற முறையில் இனவாதமான கேள்விகளை எழுப்ப வேண்டாம். இது சிங்களவருடைய நாடு என்று எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

இது இலங்கை. இங்கு, பௌத்தர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என பல இனத்தவர்கள் சமத்துவத்துடன் வாழ்கின்றனர். இனவாதத்தை ஏற்படுத்தும் சொற்களை பாவிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்." என்றார்.

எதிர்பார்த்ததைப் போலவே, வித்தியா படுகொலைக்கு நீதி கோரிய உணர்வெழுச்சி போராட்டங்களும் இனவாத அரசியலில் சதிவலைக்குள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

கற்றறிந்த சமூகம் என்று ஒரு காலத்தில் முன்னிறுத்தப்பட்டு வந்த தமிழ்ச் சமூகம் இன்றைக்கு கல்வி, பொருளாதாரம், சமூக ஒழுக்கம், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை என்கிற விடயங்களில் பின்தங்கியிருக்கின்றது. அவற்றை முன்னோக்கி நகர்த்துவது மிகவும் அவசரமானது.

அது, அரசியலுரிமைப் போராட்டத்தின் இருப்புக்கு முக்கியமானது. இல்லையென்றால், வாக்கு அரசியலின் இனவாத போக்கினுள் ஒரு கருவியாக மட்டுமே தமிழ் இனவாதமும் நீட்சி பெற்று தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும்!

# வித்தியா தொடர்பான முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தவறு

## வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சம்பவம் நடைபெற்ற அன்று இரவு 08.20 மணிக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு முறைப்பாட்டை பொலிஸார் உதாசீனம் செய்தது என்று கூறப்படுவது தவறு என வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவியின் தாயாரால் குறிகட்டுவான் பொலிஸ் காவலரனில் செய்யப்பட்ட முறைப்பாட்டை ஏற்காமையால்தான் கல்வீச்சு தாக்குதல் இடம்பெற்றதாகவும், ஊர்காவற்றுறை. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை ஏற்காது பொலிஸார் நடந்து கொண்டமை குறித்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறிகட்டுவானில் இருப்பது பொலிஸ் நிலையம் அல்ல அது காவலரன் இதில் முறைப்பாடு பதிவு செய்ய முடியாது என தெரிவித்தமையால் தான் கடமையில் இருந்த பொலிஸார் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இதில் பொலிஸார் காயமடைந்தனர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அன்று இரவு 8.20 மணிக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யவில்லை என்பது தவறு இது விடயம் தொடர்பில் மேலதிக தகவல்கள் கிடைத்தால். தற்போது விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட புலனாய்வுத் துறையினருக்கு ஊடகவியலாளர்கள் வழங்க முடியும். அவர்கள் விசாரணைகளை மேற்கொள்ள முடியும். இதனால் உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு நடை பவனி



(யாழ்ப்பாணம்)

யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரிச் சமூகம் ஒன்றிணைந்து அண்மைக்காலமாகப் பெண்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு நடை பவனியொன்றை நேற்றுமுன்தினம் முன்னெடுத்திருந்தது.

காலை 08 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியில் ஆரம்பித்த நடைபவனி பாடசாலையில் சென்று நிறைவடைந்தது. இந்த நடைபவனியில் கல்லூரியின் அதிபர் வி.ரி.ஜெயந்தன், மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கெடுத்துள்ளனர்.

சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கப்பாலுள்ள பாடசாலை நோக்கிச் சென்று நிறைவடைந்த இந்த நடை பவனிக்கு பொலிஸார் பூரண பாதுகாப்பு வழங்கியுள்ளனர். இந்த நடைபவனியைத் தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்துரைகள் இடம்பெற்றன.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு நீதி கேட்டும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டித்தும் இந்த விழிப்புணர்வு நடை பவனி இடம்பெற்றது.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொடூரமான படுகொலையைக் கண்டித்து பாடசாலைச் சமூகத்தால் அண்மையில் பாடசாலை முன்பாக அமைதி வழி கண்டனப் பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஏழாலை பகுதியில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண்களைத் தலைமையாகக் கொண்ட 5 குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்கான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.


ஏழாலை மக்கள் முன்னேற்றக்கழகத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்தி சங்கமண்டபத்தில் சங்கத்தின் தலைவர் வி.வித்தகரஞ்சன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கோழி வளர்ப்புக்கான கூடு, கோழிக் குஞ்சுகள் அதற்கான தீன் என்பன வழங்கப்பட்டன.

இதற்கான நிதியை ஏழாலையைச் சேர்ந்த புலம்பெயர்ந்து இங்கிலாந்தில் வசிக்கும் அன்பர் ஒருவர் வழங்கினார்.

வடமாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன். பாலச்சந்திரன் கஜதீபன், வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா பிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பைக்கோ இயந்திரம் கையளிப்பு



யாழ்.நல்லூர் பிரதேச சபைக்கு உள்நாட்டு மாகாண சபைகள் அமைச்சினால் புதிய பைக்கோ இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

, அத்துடன் பிரதேசசபை மலக்கழிவகற்றும் பௌசர் ஒன்றை சபை நிதியிலிருந்து கொள்வனவு செய்துள்ளது. இதற்காகச் சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவாகியுள்ளது.

ஏற்கனவே இரண்டு வாகனங்கள் அரசினால் மேற்படி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டல்



வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையை கடல் அரிப்பில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் அணைக்கட்டு ஒன்று கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் 09.30 மணி வரையான சுப வேளையில் வல்வெட்டித் துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு தண்டபாணிக தேசிகரின் சமய அனுட்டானங்களுடன் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் பருத்தித்துறை பிரதேசசபையின் பொருளாதார உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டியிருந்தனர். .இந்த அணைத்திட்டமானது அரசின் கிராமசேவகர்களுக்குரிய நிதிப்பங்கீட்டின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலகம், வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களின் நிதிப்பங்கீட்டுடன் முன்னெடுக்கப்படவுள்ளது. வல்வையில் ஏற்கனவே இவ்வாறானதொரு அணைக்கட்டு, ரேவடி கடற்கரைப் பகுதியில் ரேவடி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் கடந்த வருடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரேவடி அணைக்கட்டின் முதன்மை மேஸ்திரியாக இருந்த ஞானேஸ்வரராசா உட்பட மற்றும் சில மேஸ்திரிமார் இந்தக் கட்டுமானத்தில் ஈடுபடவுள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்

(31.05.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 17 ஆம் திகதி.
சித்தம் யோகம். திரயோதசி - திதி. கரிநாள்.
சுவாதி நட்சத்திரம் மாலை 06.14 வரை. பின் விசாகம்.
இராகுகாலம் 04.22-05.52 வரை சுபநேரம் 08.52-10.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.வ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — செய்தொழிலில் போட்டியும் நஷ்ட நிலைப்பாடும் எதிர்பார்த்தல்.

**ரிஷபம்** — பணக் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக செயற்படுங்கள்.

**மிதுனம்** — வெளிநாட்டினின்றும் உறவுகள் வருகை தந்து மகிழ்வினை ஏற்படுத்தல்.

**கடகம்** — பிணைக்கும் துணைக்கும் போவதைக் கைவிட்டு விடுங்கள்.

**சிம்மம்** — எதிர்பாராத இடமாற்றமும் குடும்பப்பிரிவும் தக்க வைக்கலாம்.

**கன்னி** — பலமுறை சிந்தித்து தீர்க்கமான முடிவினை எடுப்பதால் துயர் விலகும்.

**துலாம்** — சகபாடிகளின் உறவினை எச்சரிக்கையாகப் பார்த்து நடப்பது நன்றாகும்.

**விருச்சிகம்** — உடல் நிலையில் ஏற்படும் பாதிப்பினை எண்ணி உதா சீனப் படுத்த வேண்டாம்.

**தனுசு** — சகோதரர்களின் விடயத்தில் இயன்றவரை தலையிடுவதைக் கைவிடவும்.

**மகரம்** — போலிப்பொருட்கள் கைக் கெட்டும் அபாயம் உண்டாம்.

**கும்பம்** — சத்திர சிகிச்சைக்காக சிலருக்கு உரிய திகதி அறிவிக்கப்படல்.

**மீனம்** — மேலதிகாரிகளுடன் நிதானப் போக்கினைக் கடைப்பிடியுங்கள்.

# குளங்களின் புனரமைப்பு பணிகள் பார்வையிட்டுள்ளார் சந்திரகுமார் எம்.பி.



2014 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட நிதியின் மூலம் பல சிறு குளங்களை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் இயக்கச்சி கலிவில் குளம் மற்றும் மல்வில் குளம் ஆகியவற்றைப் புனரமைக்கும் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மல்வில் குளத்தினை புனரமைப்பதற்காக சுமார் 3.92மில்லியன் ரூபாவும் கலிவில் குளத்தினை புனரமைப்பதற்காக 3.8மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. குறித்த பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதனூடாக வரட்சி காலங்களில் ஏற்படும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கிலும் மற்றும் கால்நடைகள் குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் சிப்தனைக்கமைவாக இவ்வாறான சிறு குளங்களைப் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் அதேவேளை குறித்த வேலைகள் உள்ளூர் கமக்கார அமைப்புக்களினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் குறித்த வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்களை கடந்த 25ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நேரில் சென்று பார்வையிட்டார்.

# முல்லை நகருக்கான பேருந்துகள் நகரில் தரித்துப் பயணிக்க ஆரம்பம்

முல்லைத்தீவு நகரத்திற்கான சகல பேருந்துகளும் பத்து நிமிடங்கள் நகரத்தில் தரித்துப் பயணிக்கத்தொடங்கியுள்ளன. முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு கடந்த மாதம் 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி.றூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து முல்லைத்தீவு பேருந்து நிலையத்திலிருந்து மாவட்டத்திற்குள்ளும் பிற மாவட்டங்களுக்கும் பயணிக்கும் சகல பேருந்துகளும் முல்லைத்தீவு நகர பொதுச்சந்தைக்கு முன்பாக பத்து நிமிடங்கள் தரித்தே பயணிக்க வேண்டும். நகரத்திற்குள் வரும்போதும் பத்து நிமிடங்கள் தரித்தே பயணிக்கவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அரச மற்றும் தனியார் பேருந்துகளுடன் கலந்துரையாடி முல்லைத்தீவு நகர மத்தியில் தரித்துச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் கடந்த புதன்கிழமை முல்லைத்தீவின் சகல பேருந்துகளும் முல்லைத்தீவு நகரத்தில் தரித்துப்பயணிப்பதாக முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது. (160)


## அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 100 நாள் வேலைத்திட்டத்தில் சில அபிவிருத்திப் பணிகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வன் அடைக்கலநாதன் வழங்கி வைத்துள்ளார்.

பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலையின் சுற்று மதில் வேலியும் 154 ஆம் வீதியின் புனர்நிர்மான வேலைக்காகவும் நாடாளுமன்ற விஷேட நிதியிலிருந்து 1125000 நிதி ஒதுக்கப்பட்டு ஆரம்பக்கட்டப் பணியினை வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் செல்வன் அடைக்கலநாதன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதற்கு பிரதம அதிதியாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வநோதராதநோதலிங்கமும், துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# ஆயுர்வேத வைத்தியசாலைக்கான புதிய கட்டடம் திறப்பு



யாழ்.நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கோண்டாவில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கான புதிய கட்டடத் திறப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 01 மணியளவில் எளிமையான முறையில் இடம்பெற்றது.

கொக்குவில் ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர் ஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார், செயலாளர் திருமதி ரி.அன்னலிங்கம், ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் திருமதி-சிவகௌரி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் இணைந்து புதியகட்டடத்தைச் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

இந் நிகழ்வில் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் மே.சாந்தசீலன், நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ.இராகவன், நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி உதவியாளர் அ.கமலேஸ்வரசர்மா, நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.ரவீந்திரதாஸ், கோண்டாவில் ஆயுர்வேத வைத்தியசாலையின் முன்னாள் டாக்டர் கே.நடேசராசா, கொக்குவில் பொது நூலக நூலகர்களான செல்வி கி.அனிதா, த.சத்தியமூர்த்தி உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடமில்லாத நிலையில் இதுவரை காலமும் தற்காலிக கொட்டகையிலேயே இயங்கி வந்தது. இந்த நிலையில் பிரதேச சபையின் முன்னாள் செயலாளராகவிருந்த ஜே.சாந்தசீலனின் முயற்சியினால் சபையின் நிதியில் காணி கொள்வனவு செயயப்பட்டுச் சுமார் 3.5 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

அவனுக்கு சிகரெட் பிடிக்க வேண்டும் போல் இருந்தது. பொக்கெற்றைத் தடவிப் பார்த்தான். பணம் இல்லை. பெரிய கடைநிறுவனம் ஒன்றினுள் நுழைந்தான். சில சிகரெட்களை அவன் பொக்கெற்றுக்குள் போட்டுக் கொள்வதைக் கடைச்சிப்பந்திகள் பார்த்தனர். அவ்வளவுதான் ஏதோ பெரிய திருட்டைக் கண்டுபிடித்துவிட்டதைப் போல அவனை உதைகத்தொடங்கினர். பாவம்! கடைச்சிப்பந்திகள்போட்ட தர்ம அடியில அவனது கால், கை, சில மார்பெலும்புகள் முறிந்து விட்டன.

அந்த நாற்பத்தொரு வயதுத் திருடன் நீதிமன்றம் போனான். வழக்கு கலிபோர்னியா நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தேவைக்கு அதிகமாகத் திருடனை அடித்துத் துன்புறுத்தியதற்காக கடைச் சொந்தக்காரருக்கு நீதிபதி அபராதம் விதித்தார். அபராதம் எவ்வளவு தெரியுமா? இருபது இலட்சம் ரூபாய்! இருபது ரூபாய் சிகரெட்டுக்காக இருபது இலட்ச ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தார் கடைக்காரர்.

*** *** *** ***

**இது மெக்சிக்கோவில் நடந்தது.**

ஐம்பது கைதிகள் ஒன்றுகூடி எடுத்த முடிவு அது. எத்தனை நாளைக்குத்தான் சிறையிலேயே இருப்பது? சுரங்கம் தோண்டித் தப்பித்துவிடலாம் என்று ஐம்பது கைதிகளும் ஒருமித்து முடிவெடுத்தனர்.

சிறைக்குள்ளிருந்து சுரங்கம் தோண்டும் வேலை இரகசியமாக நடந்தது. சிறைக் காவலர்களுக்குச் சந்தேகம் ஏற்படாவண்ணம் ஒவ்வொரு கைதியும் வியர்வை சிந்தி உழைத்த உழைப்புக்குப் பலன் கிட்டும் நேரம் வந்தது. தோண்டப்பட்ட சுரங்கம் மறுபுறத்தில் பூமியை எட்டிப்பார்க்கும் நேரம்.... 'அடுத்தது விடுதலைதான்' என்று சந்தோஷப்பட்டவர்கள் ஏமாந்து போனார்கள்.

அந்தச் சுரங்கம் முடிவடைந்து வெளியேறிய இடம் ஒரு நீதிமன்றம். வேறு ஏதோ வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த நீதிபதி, இந்த விசித்திர விருந்தாளிகளைப் பார்த்துத் திகைத்துப் போய்விட்டார்.

பிறகென்ன? அந்த வழக்கை ஒத்திவைத்துவிட்டு இவர்களது வழக்கை எடுத்துக்கொண்டு, இவர்களுக்கு ஆயுள் தண்டனையை வழங்கினார் நீதிபதி.

*** *** *** ***

ஔரங்கசீப், அக்பரின் இரண்டாவது பேரன். இவர் தன் மகனுக்கும் அக்பர் என்றே பெயரிட்டிருந்தார். அந்த அக்பர் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு தந்தை ஔரங்கசீப்பிற்கு எதிராகப் போராட்டம் நடத்தினார். மதியூகம் நிறைந்த ஔரங்கசீப் உடனே ஒரு கடிதம் எழுதினார்.

அதில், "மகனே அக்பர்... எதிரிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களின் அத்தனை ரகசியங்களையும் அறிந்து வா... நீ என்னுடைய எதிரியாகவே நடி!" என்று எழுதி, அக்கடிதத்தை அக்பரின் நண்பர்கள் கையில் கிடைக்கும்படி செய்தார். அதன் பிறகு அக்பர் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு ஔரங்கசீப்பின் ராஜதந்திரம் வென்றது!

*** *** *** ***

ஔரங்கசீப்பின் மகன் "ஷா ஆலம்' வசம் ஒரு முரட்டுக் குதிரை இருந்தது! "அதை அடக்கினால் பொற்காசுகள் பரிசு! தோற்றால் சிறைத் தண்டனை!' என்று அறிவிக்கப்பட்டது! செஞ்சி மன்னர் சிரோப் சிங் பந்தயத்தில் பங்கேற்று தோற்று 16வருட சிறைவாசம் பெற்றார். "சிறையிலிருந்த சிரோப் சிங்'கின் மனைவி ராமாபாய்க்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து வளர்ந்து அப்பா சிறையிலிருப்பதை அறிந்தது. "அதே குதிரையை அடக்கி அப்பாவை மீட்பேன்' என்று சபதமெடுத்து டெல்லி சென்று குதிரையை அடக்கி அப்பாவையும் மீட்டு அதே குதிரையை அன்பளிப்பாக ஷா ஆலமிடம் பெற்றவன்தான் "ராஜா தேசிங்கு'. அப்போது அவன் வயது என்ன தெரியுமா? 15.

*** *** *** ***

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனைக் காண அவரின் நண்பர் வந்தார். வந்தவரோ தன் உறவினரைக் குறை சொல்லியவண்ணமே இருந்தார். இது என்.எஸ்.கே.வுக்குப் பிடிக்கவில்லை. திடீரென்று கலைவாணர் அவரின் சட்டைப் பொக்கெற்றில் இருந்து பேர்ஸை எடுத்துக் கொண்டார். அவரோ விழித்தார். "பயப்படாதீங்க, இந்த பேர்ஸில் எவ்வளவு இருக்கு?" என்றார் என்.எஸ்.கே.. அவரோ, "தெரியாது. எண்ணிப் பார்க்க வேண்டும்" என்றார். "பேர்ஸ் உங்களது, உங்கள் பொக்கெற்றிலிருந்துதான் எடுத்தேன். பணம் உங்களது. எவ்வளவு பணம் இருக்கு என்று கணக்குத் தெரியவில்லை. ஆனால், உங்கள் உறவினரைப் பற்றி அடுக்கடுக்காக குறை சொல்றீங்களே? எது முக்கியம்? யோசிச்சீங்களா?" என்றார் என்.எஸ்.கே.

தினமுரசுக்கு வந்த கடிதம் தினமுரசு

## வடக்கு மாகாணத்தின் முதல்வரே-பிரதம செயலாளரே சீராக்கல் கடமையை செய்வீர்களா?

### கடந்தகால உள்ளூராட்சி வரலாறு சீரழிக்கப்பட்டது தான் உண்மை

வடமாகாணத்தில் அட்டவணைப்படுத்தப்படாத பதவி அணியினர் என கூறப்படும் 200 பேருக்கு வடக்கு முதல்வர் க.வி.விக்னேஷ்வரன் தலைமையில் அண்மையில் 180 நாள் வேலைத்திட்ட பயனாளி களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளின் ஆளணி வெற்றிடங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு உள்வாரியாக செயலாளர்களினால் விளம்பரம செய்யப்பட்டு நீண்டகால இழுபறியின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனத்திலும் பிரதேச சபைகளின் நகர சபைகளின் மக்கள் பிரதிநிதிகளான தவிசாளர் உள்ள போது செயலாளரே நியமனத்திற்கு பொறுப்பு என்ற வகையில் சட்டங்களை திரிவுபடுத்தி வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களின் தலையில் "பூச்சூடி" ஆட்டிவைத்து நியமனம் வழங்கிவிட்டனர்.

உள்ளூராட்சி மன்றத்தின் சட்டத்தின் பிர.சபை 9. இன் பிரகாரம் தவிசாளர் அல்லது சபையில்லாத காலங்களில் செயலாளர் ஆனவர் தவிசாளரின் கடமைகளைப் பொறுப்பேற்று செய்வதும் அதற்காக தவிசாளரின் பதில் கடமை கொடுப்பனவையும் செயலாளர் பெறுவது என்பது வழமையானதான விடயம் ஆனால் பிரதேச சபை சட்டத்தின் 8 [1] இன் உள்ள அதிகாரங்களின் படி தவிசாளரே பிரதான நிறைவேற்று அலுவலராக சகல தத்துவங்களுக்கும்பொறுப்பு வாய்ந்த பிரதான கணக்கீட்டு அலுவலராகவும் கடமைபுரிவார் என மும்மொழிகளிலும் [சிங்களம், தமிழ், ஆங்கிலம்] சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்று பட்டம் பெற்றவர்கள், வெளிவாரியாக பட்டம் பெற்ற வர்கள், G.A.Q படித்தவர்கள், ஜீ.சீ.ஈ. உயர்தரம்] சாதாரண தரம், 8 ஆம் வகுப்பு படித்தவர்கள் என இலகுவில் அடையாளப்படுத்தி விடலாம்.

இங்கு வேலைசெய்யும் ஆற்றலும், விருப்பமும் உடைய காரணி ஒன்று வேலையற்று இருந்தால் அங்கு வேலை யின்மை நிலவுகின்றது என்பது பொருள்படும்.

உள்ளூராட்சி சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத பதவி என்பது 8 ஆம் வகுப்புக்கும் ஜீ.சீ.ஈ. சாதாரண தர சித்திக்கும் எட்பட்டவர்களுக்கு மட்டுமே வேலையை.வழங்கி உள்ளூராட்சியின் தரத்தை, சேவையை மேம்பாடு செய்திட வேண்டும் என்பது யதார்த்த தீர்வாகும்.

ஆனால் வடக்கு உள்ளூராட்சி சபைகளின் செயலர்களி னால் மந்தகதியில் இடம்பெற்ற நியமனங்களில் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளில் அதுவும் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றவர்கள், ஜீ.சீ.ஈ. உயர்தரத்தில் கூடிய சித்தி பெற்றவர்கள் பட்டதாரிகள் மற்றும் உயர்தகைமை உடையவர்களுக்கு இப்பதவிகள் வழங்கப்பட்டு சீர்குலைக்கப்பட்டு விட்டன. எனவே நியமனம் வழங்கல் என்பது நிறைவேறி விட்டது.

ஆனால் எந்தவொரு உள்ளூராட்சி சபைகளிலும் நியம னத்தை பெற்றவர்கள் கீழ் மட்ட வேலைகளை செய்வதற்கு தயார் இல்லை.

அவர்கள் சபை சூழலை சுத்தப்படுத்தவோ, கூட்டவோ மருந்துகள் விசிறவோ அல்லது காரியாலய கோவைகள் கையாளவோ அல்லது சிற்றுண்டிகள் வழங்கவோ தயாரில்லாத நிலையில் மேசையில் அமர்ந்து வைற்கொலர் [White Scholar] எனும் வெள்ளை காற்சட்டை வேலைக்கே தயாராகின்றனர் என தெரியவருகின்றது.

இதனால் நடைபெறப்போவது என்ன அரசாங்கத்தினால் முழுநன்மை வேதனம் கிடைக்கப்போகின்றதே தவிர எந்த வேலைத் திட்டங்களோ சபைகளின் முன்னேற்றங்களோ நடைபெறப்போவ தில்லை என்பது யதார்த்த உண்மையாகும்.

இந்நிலையில் கடந்தகால பிரதம செயலாளர்கள் உள்ளூராட்சி சபைகளிற்கு முகாமைத்துவ தரத்தில் மட்டும் உள்ளவர்களை நியமிப்பதற்கு வலிந்து இழுத்து உள்ளூராட்சி யின் சேவைத்தரத்தை குறைத்து முகாமைத்துவ சேவையின் சுப்றா தர அலுவலர்களை நியமிப்பதற்கு எடுத்த நடவடிக்கை யானது உள்ளூராட்சியின் சாபக்கேடாக மாறியது. இதனால் ஏனைய தரத்தில உள்ளவர்கள் மதிப்பதில்லை.

இன்று வடக்கில் மட்டுமன்றி நாடுதழுவிய ரீதியில் பட்டதாரிகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு பல்வேறு சேவைகளில் நிறைவேற்று தரங்களில் நியமனம் பெற்று சேவையாற்றுகின்றனர்.

மீளவும் பதவி அணிகள் புதிய பதவிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு உள்ளூராட்சியின் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் செயலாளர் பதவியை தரம் உயர்த்தி அதாவது முகாமைத்துவ உதவியாளர் சுப்றா தரம் என்பதற்கு பதிலாக இலங்கை நிர்வாக சேவை தரத்தையும் பட்டதாரிகளையும் உள்வாங்குவ தற்கு ஏற்ற நடவடிக்கையை வடக்கு மாகாணத்தின் முதல்வராக உள்ள உள்ளூராட்சி அமைச்சர் விளங்கிக் கொண்டால் மாத்திரமே கடந்த 30 வருட அழிவுக்கு பின்னரான மறு மலர்ச்சி ஏற்படும்.

இல்லாவிட்டால் மீண்டும் வடக்கில் வீழ்ச்சியே தவிர வேறொன்றும் இல்லை. பொறுத்திருந்து அவதானிப்போம்

நன்றி

சி.க.வேலும்மயிலும்
இளைப்பாறிய அலுவலர்

## வடக்கின் குடிப்பரம்பல் சமநிலையில் தளம்பல்

(யாழ்ப்பாணம்)

**வடக்கிற்கு நீர் வழங்குதல் என்ற போர்வையில் வெளி இடங்களில் இருந்து சிங்கள மக்களை கொண்டு வந்து குடி யேற்றுவது தீவிரமான ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. இது குடிப்பரம்பலை பெரிதும் பாதிக்கிறது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.**



வடக்கு, கிழக்கில் போருக் குப் பிந்திய மனித உரிமைகள் நிலை குறித்து, கலிபோர்னியா வைத் தளமாகக் கொண்ட ஓக்லன்ட் நிறுவகம் நடாத்திய ஆய்வு அறிக்கை நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்வை முன்னிட்டு, நடாத்தப் பட்ட அனைத்துலக ஊடகவிய லாளர் மாநாட்டில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசி மூலம் கலந்து கொண்டு அறிமுக உரை ஆற்றினார்.

இதன்போது கருத்துத் தெரி வித்த முதலமைச்சர் விக்னேஸ் வரன்,

'வளமான நிலங்களில் இராணுவம் விவசாயம் செய்து அந்த அறுவடைகளை பெற்றுக் கொள்ளும் அதேவேளை அந்த நிலங்களுக்கு சொந்தமான தமிழ் மக்கள் தற்காலிக இடங் களில் அகதிகளாக வாழ்கின்றனர்.

இராணுவம் மிகப்பெரும் அளவில் வியாபார முயற்சிகளி லும், தமது சொத்துக்களை பெருக்குவதிலும், நிர்மாண செயற்றிட்டங்களிலும், சுற்று லாத்துறை செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறது.

அனேகமாக போர்க்குற்றங்க ளில் ஈடுபட்ட 150,000 இராணு வத்தினர் வடக்கில் நிலைகொள் ளச் செய்யப்பட்டுள்ளமை எமது முன்னேற்றத்தை பாதிக்கிறது.

எமது மக்களின் வளமான நிலங்கள் மற்றும் வீடுகள் இரா ணுவத்தினால் எடுக்கப்பட் டுள்ளன. மேலும் மேலும் நிலங்களையும் வீடுகளையும் வசப்படுத்துவதற்கான விண் ணப்பங்கள் இராணுவத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

என்னால் சாத்தியமான அளவுக்கு அவற்றை நிராகரித்தி ருக்கிறேன்.

மிகப்பெரிய ஆறான மகாவலியில் இருந்து வடக் கிற்கு நீரை கொண்டு வருதல் என்ற போர்வையில் எமது மாகாணத்துக்குள் நிலங்கள துப்புரவு செய்யப்பட்டு திறந்து விடப்பட்டு வெளி இடங்களில் இருந்து சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்படு கிறார்கள்.

13 ஆவது திருத்த சட்டத் துக்கு வழங்கப்பட்டுள்ள அற்ப மான அதிகாரத்தை மகாவலி அதிகாரசபை அத்துமீறுவதுடன் எமது நிலங்களையும் அந்த நிலங்கள் மீதான எமது உரிமைகளையும் இல்லாமல் போகச் செய்யும் வல்லமையை யும் கொண்டிருக்கிறது.

ஆனால், இன்று வரை மகாவலி ஆற்றில் இருந்து இன்று வரை வடக்கிற்கு ஒரு துளி நீர் கூட வரவில்லை.

இந்த நிலங்களில் தமது உரிமத்துக்கான உறுதிகளை தமிழ் மக்கள் வைத்திருக்கின்ற நிலையில் அங்கு குடியேற்றப் பட்டுள்ள சிங்கள மக்களுக்கு முன்னைய அரசினால் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கம் வந்த பின்னரும் இதனை ஒழுங்குபடுத்து வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை' என்று கூறினார்.

## டில்லிக்கும் புதிய தூதுவர்

இந்தியாவிற்கான புதிய உயர்ஸ்தானிகர் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுத்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதியவர் ஒருவரை அர சாங்கம் தெரிவுசெய்துள்ள போதிலும், அவருக்கான நியம னம் வழங்கும் வரை தற்போது இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் தொடர்ந்தும் பதவியில் இருப்பார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட் டுள்ளது. அரசியல் தலை யீட்டிலும், தகுதிக்குக் குறைவாக வும் நியமிக்கப்பட்ட வெளி நாட்டு இராஜதந்திரிகளை புதிய அர சாங்கம நாட்டிற்கு அழைத் துள்ளது. இவ்வாறு 63 வெளி நாட்டு இராஜதந்திரிகளை அரசாங்கம் மீள அழைத்துள்ளது.

## 20 ஐ ஏற்றுக்கொள்ள முடியாது



புதிய தேர்தல்முறை அடங்கிய 20 ஆவது திருத்தசட்ட மூலத் திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கினாலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என கூட்ட மைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 255 ஆக அதி கரிக்கப்படுவது சிங்கள பிரதிநிதித் துவத்தை மாத்திரம் அதிகரிப்பதாக அமையக் கூடாது என்றும் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிக ளும் அதிகரிக்க கூடிய வகையில் தொகுதிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய தேர்தல் முறைக்காக தம்மால் வழங்கப்பட்ட எந்த வொரு யோசனையும் திருத்த சட்டமூலத்தில் சேர்க்கப்பட வில்லை என்றும் பெரும்பான்மை கட்சிகளின் விருப்பங்களிற்கு மாத்திரமே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இந்தச் சட்ட மூலத்தை ஏனைய கட்சிகளும் ஏற்றுக்கொள ளாது எனவும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படு வதற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்ய முடியும் என்றும் சுரேஷ் பிரேமச் சந்திரன் மேலும் கூறினார்.

## விளையாட்டு வீரர் மரணத்தில் மர்மம்

### கொலையா? விபத்து மரணமா?

(கொழும்பு)

பிரபல றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனை யார் கொலை செய்தது, எவரது தேவைக்காக அந்தக் கொலை செய்யப்பட்டது என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடை பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

தாஜுடீன் வாகன விபத்தொன் றில் கொல்லப்பட்டதாக கூறப் பட்டாலும் அவர் விபத்தில் உயிரி ழக்கவில்லை எனவும் கொலை செய்யப்பட்டார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வசீம் தாஜுடீனின் மரணம் சம்பந்தமான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஊடகவிய லாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் மேற்கொண்டு வரும் விசாரணை கள் முடிவுக்கு வந்துள்ளன.

விசாரணை அறிக்கையை வெளியிட்டால், இறுதியான விசார ணைகளுக்கு அது அழுத்தங் களை ஏற்படுத்தக் கூடும் எனவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி அதிகாலை நாராஹேன்பிட்டி நகரில் பிரபல றகர் விளையாட்டு வீரரான வசீம் தாஜுடீன் தனது வாகனத்திற்குள் எரியுண்ட நிலையில் உயிரிழந்து கிடந்தார்.


தாஜுடீனின் மரணம் வாகன விபத்தினால் ஏற்பட்டது என்று அன்றைய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக இருந்த அஜித் ரோஹன குறிப்பிட்டிருந்தார்.


தாஜுடீன் பயணித்த கார் மதில் ஒன்றில் மோதியதால், கார் தீப்பிடித்ததில் அவர் இறந்து போனதாகவும் அஜித் ரோஹன கூறியிருந்தார்.

31. 8m நீளமும் 8m அகலமும் உடைய சதுர வடிவ தரைக்கு தரையோடு பதிப்பதற்கு கூலியாக ரூபா 3200 வழங்கப்பட்டது எனின் 4m நீளமும் அகலமும் உடைய சதுரவடிவ தரைக்கு தரையோடு பதிப்பதற்காக எவ்வளவு செலவாகும்?
1) 1600 ரூபா 2) 800 ரூபா 3) 2400 ரூபா

32. யாழினி 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 29ஆம் திகதி தனது பிறந்த தினத்தை கொண்டாடினாள் இது அவளது எத்தனையாவது பிறந்த தினமாக இருக்கலாம்?
1) 9ஆவது 2) 8ஆவது 3) 11ஆவது

(03) 33ஆம், 34 வினாக்களுக்கு A, B இடையே உள்ள தொடர்பினை அவதானித்து C உடன் தொடர்புபடக் கூடிய உருவை தெரிவு செய்க

33.


34.


35. அண்ணா எனக்கூறிய வண்ணம் இராமனின் காலடியில் விழுந்தான் இங்கு பயன்படுத்த வேண்டிய நிறுத்தற்குறிகளை எவை?
1) மேற்கோள், காற்புள்ளி, அடைப்புக்குறி
2) மேற்கோள், வியப்புக்குறி, முற்றுப்புள்ளி
3) வியப்புக்குறி, அரைப்புள்ளி, காற்புள்ளி

36. எழுத்துக்களுக்குரிய இலக்கங்களை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிக

| கரம் | சமர் | பங்கு | சங்கமம் |
|---|---|---|---|
| 357 | 428 | 916 | ...... |

1) 42768 2) 41327 3) 35926

37. சிந்தியா எப்பொழுதும் தன்னை பற்றிமட்டுமே சிந்திப்பவள் பிறர் நலனை பற்றி அக்கறை கொள்ள மாட்டாள். சிந்தியாவை குறிக்கும் சொல் யாது?
1) சுயநலவாதி 2) பொதுநலவாதி 3) இரக்கமானவள்

38. வட இந்தியாவில் உள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்த இவர் அஹிம்சை வழியில் இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்று கொடுத்தார். இவர் யார்?



### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 1.2 | 2.1 | (02) 3.3 | 4.1 | 5.2 | 6.1 |
| 7.2 | 8.2 | 9.2 | 10.3 | 11.2 | 12.1 |
| 13.3 | 14.2 | 15.3 | 16.1 | 17.2 | 18.3 |
| 19.2 | 20.1 | (03) 21.3 | 22.1 | (04) 23.3 | 24.1 |
| 25.3 | 26.2 | 27.1 | 28.1 | (05) 29.3 | 30.1 |
| 31.2 | 32.1 | 33.1 | 34.2 | 35.1 | 36.3 |
| 37.1 | (06) 38.1 | (07) 39.2 | | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) கீழ்க்காணும் பிரச்சினையில் கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்கு பதிலாக இடக்கூடிய எண்களுடன் கூடிய கூட்டை தெரிவு செய்க


01. 15 + [12 + 18] = 45
1) [6 x 5] 2) [42 - 15] 3) [16 + 12]


02. 6 x 4 + 3 = 27
1) [30 - 9] 2) [18 + 6] 3) [5 x 5]

03. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு இதன் தலைநகர் ஒஸ்லோ இந் நாட்டின் பெரும் பகுதி மனிதர்கள் வசிக்க முடியாத மலைகளும், பனி ஆறுகளும் நிறைந்துள்ளன. இங்கு கூறப்படும் நாடு எது?
1) இங்கிலாந்து 2) பிரேசில் 3) நோர்வே

04. M, K, S, T, V, O, P ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது எழுதிய விதத்தின் படி தெரிகின்ற எழுத்துக்களின் விடையின் கீழ் கோடிடுக
1) M, K, S, P 2) M, T, V, O 3) K, S, V, P


05. ரவி தனது வீட்டில் இருந்து பாடசாலைக்கு சென்ற திசைகளை இவ்வுரு காட்டுகின்றது அவன் அதிக தடவை திரும்பிய திசை எது?
1) வலதுபக்கம் 2) இடதுபக்கம்
3) இருபக்கமும் சமம்





06.


இந்த நான்முகியில் உள்ள முகங்களினதும், உச்சிகளினதும், விளிம்புகளினதும் எண்ணிக்கை முறையே?
1) 4, 4, 4 2) 4, 6, 6 3) 4, 4, 6

07. ஒரே இயல்புடைய இரு உருக்களை கொண்ட அடைப்பின் கீழ் கோடிடுக



08. ஓட்ட நிகழ்வு ஒன்றின் நான்கு சந்தர்ப்பங்கள் ஒழுங்குமாறி தரப்பட்டுள்ளன அவற்றை ஒழுங்கு முறையில் காட்டும் விடையை தெரிவு செய்க





1) B, D, A, C 2) A, B, D, C 3) B, C, A, D

09. தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் ஒழுங்குமுறை யாது?
A - உன்னைப் போல சிறுவனால்    B - சின்னக்குருவி முயற்சியால்
C - ஊரை வெல்ல முடியுமே    D - சிறிய கூடு கட்டினால்
1) B, D, A, C    2) A, D, B, C    3) B, C, A, D

10. 2014ஆம் ஆண்டு ஜனவரி 1 தொடக்கம் ஏப்ரல் 8 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
1) 103நாட்கள்    2) 101 நாட்கள்    3) 98 நாட்கள்

11. முதலில் தரப்பட்ட வடிவம் எந்த விடைகளில் உள்ளது என கண்டறிந்து கோடிடுக





12. அகர வரிசையில் அமைந்த சொற் கூட்டத்தை தெரிவு செய்க?
1) இலை, ஊசி, ஓடம்    2) ஆமை, ஐயா, ஏணி    3) அலை, ஏழை, உரல்

13. " உண்ணாச் சொத்து மண்ணாய் போகும் " என்ற பழமொழியின் கருத்து
1) வறுமையிற் செம்மை    2) தர்மம் செய்    3) உலோபங் கூடாது


14. மனநிறைவே ஒருவனுக்கு சிறந்த செல்வம் என்ற கருத்தை தரும் பழமொழி
1) " போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து "
2) " பொறுத்தார் பூமியாள்வார் "
3) " நித்தம் போனால் முற்றம் சலிக்கும் "

15. முதலில் தரப்பட்ட இருகோலங்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவை தெரிவு செய்க?





16. தரப்பட்டுள்ள எண்களில் 3ஆல் வகுக்கும் போது ஒன்று மீதியாகும் எண் யாது?
1) 68    2) 72    3) 43

17. A யில் இருந்து B ஊடாக C வரையான தூரத்தை காண்க
1) 6km 250m
2) 5km 250m
3) 5km 450m




18. வரிசை ஒன்றில் விதுஷா முன்னாலிருந்து எட்டாவதாகவும் பின்னாலிருந்து பத்தாவதாகவும் நின்றாள் இதன்படி வரிசையில் எத்தனை பேர் நின்றனர்?
1) 18பேர்    2) 17பேர்    3) 19பேர்

19. A → திண்ம வடிவங்கள் B → சதுரமுகி C → கனவுரு எனின் சரியான தொடர்பை காட்டும் உருவை தெரிவு செய்க





20. " பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே " தரப்பட்ட மேற்கோள் குறிப்பது
1) விடாமுயற்சி    2) தேசப்பற்று    3) ஒற்றுமை



(02) 21ஆம், 22ஆம் வினாக்களில் மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன முதலிரு கூற்றுக்களையும் கொண்டு மூன்றாவது கூற்றை ஊகிக்க முடியும் எனின் (சரி) எனவும், ஊகிக்க முடியாது எனின் (பிழை) எனவும் எழுதுக


21. ஆதவனின் தங்கை ஆரணி
ஆரணியின் அண்ணா காவியன்
ஆகவே ஆதவனின் சகோதரன் காவியன் ( )

22. விதுவை விட அரபாத் உயரமானவன்
இமாம் விதுவை விட உயரமானவன்
ஆகவே இமாம் அரபாத்தை விட உயரமானவன் ( )




23. இவ்வுருவில் உள்ள உருக்களை குறிக்கும் தனிச்சொல் எது?
1) உபகரணங்கள்    2) இசைக்கருவிகள்
3) விளையாட்டுப்பொருட்கள்

24. கடிகாரம் காட்டும் கோணம் யாது?
1) விரிகோணம்    2) கூர்ங்கோணம்
3) செங்கோணம்



25.




-?- இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடை யாது?
1) 8 x 3    2) 9 x 4    3) 11 x 4

26. இன்று புதன்கிழமை நேற்றைக்கு முந்திய தினத்திற்கும் கடந்த புதன்கிழமைக்கும் இடையில் எத்தனை நாட்கள் உள்ளன?
1) 4    2) 5    3) 6


27. இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை தெரிந்து கோடிடுக
சூரிய ............. யை கண்ட பறவைகள் .......... எழுப்பிய படி பறந்து சென்றன
1) ஒலி, ஒளி    2) ஒலி, ஒழி    3) ஒளி, ஒலி

28.

| |
|---|
| பல்லைப்பல்லை இளிக்கும் - இது<br>பாலரைக் கண்டாற் சிரிக்கும்<br>காசு பணமும் கேட்கும் - நல்ல<br>காவடியும் ஆடும் |

பாடலில் கூறப்படும் பிராணி எது?
1) குரங்கு    2) முதலை
3) கரடி

29. உரு A இல் தராசை பாருங்கள், அதில் இருபக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறை சமமாகும்




உரு B இல் உள்ள தராசை சமப்படுத்தவதற்கு தராசு Bஇல் இடவேண்டிய உருக்கள் எவை?
1) ○○    2) □△    3) ○○○

30. அறுபதாவது ஆண்டில் கொண்டாடப்படும் மணிவிழாவை குறிக்கும் இன்னொரு சொல் யாது?
1) பவளவிழா    2) அமுத விழா    3) வைரவிழா

# புலிகளின் காலத்திலேயே பெண்களுக்கு அதிக பாதுகாப்பு

## இப்போது வினைத்திறனற்ற பொலிஸார்



(கொழும்பு)
பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய பொலிஸார் வினைத்திறனுடன் செயற்படுவதில்லை என்று பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தொவித்தார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் வடக்கு பெண்கள் மிகுந்த பாதுகாப்பினை உணர்ந்ததாகவும் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

நள்ளிரவில் கூட பெண்களும் சிறுமிகளும் பாதுகாப்பான முறையில் வீட்டை விட்டு வெளியேறிச் செல்லக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்:

பெண்களுக்கு எதிராக இடம்பெற்ற பல வன்முறைகளை கடந்த அரசாங்கம் ஊடகங்களில் வெளியிடப்படுவதனை தடுத்து நிறுத்தியது.எனினும் புதிய அரசாங்கம் எவ்வித ஊடகத் தணிக்கைகளையும் விதிக்கவில்லை.

ஊடக சுதந்திரம் காணப்படுவதனால் வித்தியா மீதான பாலியல் வன்கொடுமையும், படுகொலையும் அம்பலப்படுத்தப்பட்டது.

வடக்கில் சிவிலியன் ஆட்சி அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், இன்னமும் பொலிஸார் வினைத்திறனாக செயற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தியானின் 9ஆம் நாள் திருவிழா இன்று



சப்பறத்திலே எழுந்தருளிவரும் ஞான முதல்வோனே!
உனைக்காண வேண்டும் கோடி கண்கள்!
விக்கினங்கள் போக்கி வைக்கும் நீராவி விநாயகனே!
வேதனைகள் நீக்கியே அருள் புரிய வேண்டுமையா!
ஆறுமுகனின் அண்ணனே! சங்கரன் மகனே!
வேண்டும் வரம் தந்திடுவாய் ஆனை முகனே!
உனைநாடி வந்தோமே சப்பறக்காட்சி கண்டிட
கணபதியே கரிமுகனே கருணை காட்டும் ஐயனே!

# 20 ஆம் திருத்தம் இறுதி முடிவு இன்னும் இல்லை



(கொழும்பு)
அரசியல் அமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

20 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் அமைச்சரவையில் கூடிய கவனம் செலுத்தப்பட்டதாகவும் அதில 15 யோசனைகள் முன்வைக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை 225 இல் இருந்து 255 ஆக உயர்த்த யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 5 வீதத்தில் இருந்து 1.5 வீதம் அல்லது ஒரு வீதமாக குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் தொகுதிவாரி மற்றும் பல் அங்கத்தவர் தொகுதி மூலம் 165 பேரை தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிடடார்.


நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகையை இனங்களுக்கு இடையில் பிரித்தல், மகளிர் பிரதிநிதித்துவத்தை 5 வீதத்திலிருந்து 10 வீதமாக அதிகரித்தல் போன்ற யோசனைகளும் முன்வைக்கப்பட்டதாக ராஜித தெரிவித்தார்.

அந்த யோசனைகளை பரிசீலிக்க குழுவொன்றை அமைக்கவும் அந்தக்குழுவின் மூலம் தயாரிக்கப்படும் இறுதி ஆவணத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கையளித்த பின் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# கிழக்கில் வீதிபுனரமைப்பு 120 மில்லியன் டொலர் செலவில்

பதுளை முதல் செங்கலடி வரையிலான ஏ5 வீதி நுழைவாயிலின் புனர் நிர்மாணப்பணியை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி கிழக்கு மாகாணத்திலிருந்து மத்திய மாகாணம் வரையிலான புவியியல் வலையத்தின் பாரிய நெடுஞ்சாலை இணைப்புப் பகுதிகளில் ஒன்றாக பேராதனை - பதுளை - செங்கலடி ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன்படி இவ்விரண்டினையும் இணைக்கும் 151.3 கி.மீ நீளத்தைக் கொண்ட பதுளை முதல் செங்கலடி வரையிலான எஞ்சிய பகுதி அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. குறித்த புனர்நிர்மாண பணிகளுக்காக ஒபெக் அமைப்பு 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. மேலும் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக அபிவிருத்திக்கான சவுதி நிதியத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை வெற்றி பெற்றுள்ளது. எனவே பதுளை - செங்கலடிக்கிடையிலான் பகுதியை 120 மில்லியன் அமெரிக்க டொலர்களில் புனரமைப்புச்செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.



யாழ். நகரப் பகுதியில் நேற்று குடிநீர் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த யாழ். மாநகர சபை குடிநீர்த் தாங்கி ஒன்று இழுவை இயந்திரத்தை விட்டு விலகி வீதியில் தடம் புரண்ட நிலையில் உள்ளதைக் காணலாம்.

# நன்மை செய்ய தவறிவிட்டது மைத்திரி அரசு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசு தமிழர்களுக்கு எந்த ஒரு உதவியோ நன்மையோ செய்யவில்லை, என, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி மூலம் வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்த போதே இவ்வாறு கூறியதாக, தமிழக ஊடகமான மாலை மலர் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணத்தில் இராணுவம் தமிழர்களிடம் கையகப்படுத்தி வைத்திருந்த வளமான பூமி தற்போது வளமற்ற களர் நிலமாக திருப்பி வழங்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் வளமான பூமியாக மாற்றித் தரப்படும் என்று அரசு அறிவித்தது. அதன்படி வழங்கவில்லை

மேலும் வடமாகாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஹோட்டல்கள் மீண்டும் மாகாண அரசிடம் ஒப்படைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆனால் ருவான் விஜேவர்த்தன கூறும் போது, அது குறித்து அரசு இன்னும் முடிவு எதுவும் மேற்கொள்ளவில்லை என முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

மேலும் வடமாகாணத்தில் முகாமிட்டுள்ள இராணுவம் வெளியேற வேண்டும் என அனைவரும் தெரிவித்து வருகின்றனர். ஆனால் இதுவரை இராணுவ வீரர்கள் வெளியேற்றப்படவில்லை.

அதை அரசு கண்டு கொள்ளவில்லை. மொத்தத்தில் 'ஜனாதிபதி சிறிசேன அரசு தமிழர்களுக்கு எந்த ஒரு உதவியோ நன்மையோ செய்யவில்லை, இவற்றை நடைமுறைப்படுத்த சர்வதேச நாடுகள் இலங்கைக்கு நெருக்கடி தரவேண்டும் என்றார்.

# புதிய நாடாளுமன்றம் அமைந்தால் பொருளாதாரம் வளர்ச்சியடையும் ஐ.தே.க. நம்பிக்கை



நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் புதிய நாடாளுமன்றத்தை அமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டிவரும் நிலையில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றம் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அமைக்கப்பட்டது. அந்த நாடாளுமன்றத்தை கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. அவ்வாறு கட்டியெழுப்ப வேண்டுமென்றால் புதிய நாடாளுமன்றத்தை அமைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

- ஆந்திர என்கவுண்டர் விவகாரம் -

# 5 இலட்சம் இழப்பீடு சி.பி.ஐ. விசாரணை

## தேசிய மனித உரிமை ஆணையம் அதிரடி பரிந்துரை



செம்மரம் கடத்தல் தொடர்பாக ஆந்திராவில் மேற்கொள்ளப்பட்ட என்கவுன்டர் விவகாரத்தில், தேசிய மனித உரிமை ஆணையம் ஆறு பரிந்துரைகளை அளித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தில் உள்ள சேஷாச்சலம் வனப் பகுதியில் என்கவுண்டர் சம்பவம் நிகழ்ந்தது. இதில் 20 தமிழர்கள் உயிரிழந்தனர். இந்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் தாமாகவே முன் வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

அந்த வழக்கை விசாரித்து தற்போது அது ஆறு பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அது தொடர்பாக ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

முதல் பரிந்துரையாக, இந்த என்கவுண்டர் சம்பவத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் இழப்பீடாக ரூ.5 இலட்சத்தை ஆந்திர அரசு வழங்க வேண்டும்.

இரண்டாவதாக, உயிரிழந்தவர்களில் 13 பேர் பழங்குடியினராக இருப்பதால், அவர்களுக்கு மேற்கண்ட இழப்பீடு முறையாகச் சென்று சேர்கிறதா என்பதை மாவட்ட குற்றவியல் நடுவர் உறுதி செய்ய வேண்டும்.

மூன்றாவதாக, இந்த விவகாரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 42/15, 43/15 மற்றும் 46/15 ஆகிய எண் கள் உடைய வழக்குகளை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் அதற்கேற்றவாறு, இன்னும் நான்கு வாரங்களுக்குள் மத்திய அரசும், ஆந்திர அரசும் இதுதொடர்பாக என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டன என்பது குறித்த அறிக்கையை தேசிய மனித உரிமை ஆணையத்தின் முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.

நான்காவதாக, மேற்கண்ட மூன்று வழக்குகளில் தொடர்புடைய சாட்சியங்களை தமிழகத்தில் உள்ள தகுந்த குற்றவியல் நடுவர் முன்பு விரைவில் பதிவு செய்ய வேண்டும்.

ஐந்தாவதாக, இந்த வழக்குகளில் தொடர்புடைய சாட்சிகள் சேகர், ஏ. பாலச்சந்திரன் மற்றும் எம்.இளங்கோ ஆகியோருக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் அவர்கள் வசிக்கும் பஞ்சாயத்துக்களின் தலைவர் களுக்கும் தமிழக டி.ஜி.பி. தகுந்த பாதுகாப்பை வழங்க வேண்டும்.

ஆறாவதாக, ஆந்திர அரசின் தலைமைச் செயலர் மற்றும் ஆந்திர பொலிஸ் டி.ஜி.பி. ஆகியோர் ஜுன் 9ம் திகதி தேசிய மனித உரிமை ஆணையத்தின் முன்பு காலை 11 மணி அளவில் நேரில் ஆஜராகி, ஏப்ரல் 13 மற்றும் 23ம் திகதிகளில் ஆணையம் கேட்டிருந்த தகவல்களை அளிக்க வேண்டும். எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வெடித்துச் சிதறியது ஷின்டாக்கோ எரிமலை



பசிபிக் கடல்பகுதியில் நெருப்பு வளையம் என்றழைக்கப்படும் ஆபத்தான நிலப்பரப்பில் அமைந்திருக்கும் ஜப்பான் நாட்டில் அவ்வப்போது ஏற்படும் நிலநடுக்கங்களின் விளைவாக எரிமலைகள் திடீர், திடீரென வெடித்து, தீப்பிழம்புகளை கக்குவது வாடிக்கையான நிகழ்வாக உள்ளது.

அவ்வகையில், ஜப்பானின் குச்சினோராபு தீவில் உள்ள ஷின் டாக்கே எரிமலை நேற்று வெடித்து சிதறியதால் சுற்றுப்பட்டில் உள்ள மலைகளில் இருந்து பாறைகள் உருண்டு, அருகாமையில் இருக்கும் கிராமங்களில் விழுந்து வருகின்றன. இதனால், அங்குள்ள மக்களை வெளியேற்ற துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அதிகபட்ச அபாய அறிவிப்பான ஐந்தாம் எண் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாகுஷிமா நகரின் அருகே உள்ள குச்சினோராபு தீவில் சுமார் 13 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு தனி விமான நிலையமும் உள்ளது. ஷின்டாக்கே எரிமலையில் இருந்து வெளியேறும் சாம்பல் அப்பகுதி வான்வெளியில் சுமார் 10 சதுர கிலோமீற்றர் தூரத்துக்கு பரவியுள்ளது


# ஆசிய அகதிகளை மீட்கும் பணியில் அமெரிக்க விமானங்கள் துரித கதி

மியன்மாரில் இருந்து வெளியேற்றப்பட்ட சிறுபான்மையின மக்கள் இந்தோனேஷியா, மலேசியா , தாய்லாந்து நாடுகளின் கடற்கரையோர எல்லைக்குள் உள்ளதாகவும், சுமார் 2 ஆயிரத்து 600 பேர் வரையில் கடலில் தத்தளித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் மேற்கண்ட நாடுகள் தங்கள் நாட்டிற்குள் அகதிகள் ஊடுருவுவதை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அகதிகள் பிரச்சினை குறித்த கூட்டம் தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆசிய கண்டத்தின் 17 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அன்னே ரிச்சர்டு உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பேசிய அமெரிக்க அமைச்சர் அகதிகளின் பிரச்சினையில் அமெரிக்க உதவி செய்ய உள்ளதாக தெரிவித்தார் இதற்கு தாய்லாந்து துணை பிரதமர் தனாசக் ஒப்புதல் அளித்தார் அதனையடுத்து தாய்லாந்து கடல் பகுதியில் அமெரிக்க கண்காணிப்பு விமானங்கள் அகதிகளை மீட்கும் பணியில் இறங்கியுள்ளன.

## உலகச் செய்திகள்

# உலகத்தமிழ் இணைய மாநாடு சிங்கப்பூரில் நேற்று ஆரம்பம்




(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் பொன்விழாஆண்டில் உத்தமம் -உலக தமிழ் தகவல் ,தொழில் நுட்பமன்றம் பிறந்த சிங்கப்பூரில் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் 14ஆவது தமிழ்இணைய மாநாட்டினை சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நேற்று 30 முதல் மூன்று நாட்கள் நடத்துகிறது ." உலகளாவிய நிலையில் வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு சிங்கப்பூர் அரசு சிறப்பான இடம் அளித்து வருகிறது . அதிகாரத்துவ மொழிகளுள் ஒன்றாக தமிழ் மொழி விளங்குகிறது .தொன்மையான மொழிகளுள் ஒன்றான திழைக் கட்டிக் காப்பதும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லுவதும் தலையாய கடமை இன்று தகவல்களுக்குப் பஞ்சமில்லை இவைகளைப் பெற்று , உணர்ந்து கவனம் செலுத்தி இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல இணையம் பயன்படுகிறது இன்றைய இளைஞர்கள் இணையத்தை வெகுவாகப் பயன் படுத்துகின்றனர் .எதிர்நோக்கும் சவால்களை இளைஞர்கள் சமாளிக்க, உயரிய தமிழ் பண்பாட்டினை - தமிழ் ஆர்வத்தினை வளர்த்திட - பயன்பாட்டிற்கு உதவிட இம் மாநாடு பயன்படும். பாலர் பள்ளி மாணவர்களும் புரிந்து கொள்ளும் அளவுக்கு - பொது மக்களும் பயன்பட கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது .

இன்றைய நவீன சமூக ஊடகங்களான டுவிட்டர் , முக நூல் போன்றவற்றிலும் மொழி பற்றிய ஈடுபாட்டையும் ஏற்படுத்த இம்மாநாடு உதவ வேண்டும் .காலத்திற்கேற்ற கருப்பொருளை இம் மாநாடு தேர்ந்தெடுத்திருக்கிறது .சிம் பல்கலை கழகமும் இணைந்திருப்பது பாராட்டுக்குரியது என சிங்கப்பூர் அரசு பிரதமர் துறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் மாநாட்டைத் ஆரம்பித்து வைத்து உரை ஆற்றுகையில் குறிப்பிட்டார் .

# தொற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் புலம்பெயர்ந்தவர்களை வெளியேற்ற உத்தரவு

## - பிரான்ஸ் அரசு தெரிவிப்பு -



பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பரிஸிற்கு அருகில் உள்ள தற்காலிக முகாம்களில் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதால் அங்கு தங்கியுள்ள புலம்பெயர்ந்தவர்களை வெளியேறுமாறு அரசு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

வடக்கு பரிஸிற்கு அருகில் உள்ள La Chappelle என்ற பகுதியில் அமைந்துள்ள மெட்ரோ ரயில்பாதைக்கு அடியில் சுமார் 400 வெளிநாட்டினர்கள் தற்காலிகமாக முகாம்கள் அமைத்து தங்கி வருகின்றனர்.

எரித்திரியா, சூடான், எத்தியோப்பியா நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ள இவர்கள் தங்களது குழந்தைகளுடன் கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் தங்கி வருகின்றனர்.

பிரான்ஸ் நாட்டின் சுகாதார துறை இந்த பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். அந்த ஆய்வில், அப்பகுதி முழுவதும் சுகாதாரமற்ற சூழல் நிலவுவதால், மோசமான தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதாக அரசிற்கு தகவல் அனுப்பியது.

இதனைத் தொடர்ந்து, கடந்த வியாழக்கிழமை முகாம்களுக்கு வந்த பிரான்ஸ் பொலிஸார், அந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு புலம் பெயர்ந்தவர்களுக்கு உத்தரவிட்டனர்

இது குறித்து பரிஸ் துணை மேயரான Dominique Versini கூறுகையில், இந்த பகுதி முழுவதும் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதால், குழந்தைகளுடன் அவர்கள் தொடர்ந்து இங்கு வசித்து வருவது ஆபத்தாக முடிந்துவிடும் என்றார்.

சூடான் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ள Amanuel(21) என்பவர் கூறுகையில், பொதுவாக நாங்கள் பிரான்ஸ் நாட்டில் குடியேற விரும்பவில்லை. இங்கு இருந்து பிரித்தானியா செல்வதற்கு ரயில் போக்குவரத்து வசதி இருப்பதால் அதற்கான முயற்சியில் ஈடுப்பட்டு வருகிறோம்

மூன்று முறை இவ்வாறு ரயில் மூலமாக பிரான்ஸை விட்டு வெளியேற முயற்சித்தபோது பொலிஸார் தன்னை கண்டுபிடித்து தடுத்து விட்டனர்.

இனிமேல் ரயில் கழிப்பறைகளில் தான் ஒளிந்து கொண்டு செல்ல வேண்டும். தற்போது இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள், என்று உத்தரவிட்டுள்ள பரிஸ் பொலிஸார், எங்கு செல்ல வேண்டும்? வேற ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்துள்ளார்களா என்ற எந்த தகவலையும் அளிக்காததால் அனைவரும் குழப்பத்தில் உள்ளதாக Amanuel தெரிவித்துள்ளார்.

# காரைநகர்– ஊர்காவற்றுறை கடற்பாதை சேவை ஆரம்பம்

## டக்ளஸின் முயற்சிக்கு கைமேல் பலன்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாக காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையிலான கடல்மார்க்க "பாதை" ஊடான சேவை அடுத்த மாதம் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த இருமாதங்களாக கேபிள் இல்லாத நிலையிலும், பாதை பழுதடைந்திருந்த நிலையிலும் இரு இடங்களுக்குமான கடல்மார்க்க சேவைகள் தொடர முடியாத நிலை இருந்து வந்தது. இதனால், காரைநகரிலிருந்து தமது தேவைகளின் நிமித்தம் குறிப்பாக நீதிமன்றம், சந்தை, பிரதேச செயலகம், பிரதேச சபை, வைத்தியசாலை, உள்ளிட்டவற்றின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ஜெயகாந்தனிடம் கடல்மார்க்கம் ஊடான பாதையின் சேவை இடைநிறுத்தப்பட்டதனால் அதனை உரிய முறையில் விரைவாக சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரியப்படுத்தியிருந்த நிலையில் செயலாளர் நாயகம் துறைசார்ந்த அதிகாரிகளிடம் கலந்துரையாடியதன் பயனாக இடைநிறுத்தப்பட்ட குறித்த பாதையின் சேவை அடுத்த மாதம் மீண்டும் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க நிறுவன அறிக்கை; நிராகரித்தது அரசாங்கம்

இலங்கையில் போருக்குப் பின்னரும், சிறுபான்மையினர் மீது மௌனப் போர் தொடர்வதாக அமெரிக்க ஆய்வு மையமான ஓக்லண்ட நிறுவகம் வெளியிட்டுள்ள அறிக்கையை அரசாங்கம் மறுத்துள்ளது.

வடக்கு மாகாணம் தொடர்பான புதிய அரசாங்கத்தின் அணுகுமுறையில் முக்கியமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்த இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர்கள் மாற்றப்பட்டு, சிவில் பின்னணி கொண்ட ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் படையினரின் சோதனைச் சாவடிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த 1013 ஏக்கர காணிகள் வடக்கு மாகாணத்திலும், அதையடுத்து சம்பூரில், 818 ஏக்கர் காணிகளும், விடுவிக்கப்பட்டுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பான விடயத்தில், தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களை வெளியிடுவதன் மூலம், தமது உறவுகள் குறித்து அவர்களின் உறவினர்கள் சிறைச்சாலைகளில் தேடுதல் நடத்தும் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க பிரதமர் பரிந்துரை செய்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோண்டாவில் மேற்கில் கள்வர்கள் நடமாட்டம்

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி கோண்டாவில் மேற்கில் நள்ளிரவு வேளையில் கள்வர் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 24ஆம் திகதி நள்ளிரவு 12மணியளவில் மேற்கு முத்தெட்டுமடச் சந்திக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் இரண்டுக்கு மேற்பட்ட வீடுகளில் மதிலேறிக் குதித்து உட்சென்ற நள்ளிரவுக் கள்வர்கள் சிறிய டோச் வெளிச்சத்தைப் பயன்படுத்தி யன்னல் கதவை உடைக்க முற்பட்ட வேளை வீட்டிலுள்ளவர்கள் திடீரென விழித்துக் கொண்டவுடன் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அருகிலுள்ள வீட்டுக்குச் சென்ற திருடர்கள் அவ் வீட்டிலும் திருடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இங்கும் வீட்டவர்கள் விழித்துக் கொண்டதால் முச்சக்கர வண்டியின் மூலம் தப்பிச் சென்றுள்ளனர்.

இரு வீட்டிலும் கொள்ளையிட முற்பட்டவர்கள் பகல் வேளைகளில் வீதிகளுக்கு அருகிலுள்ள கடை வாசலின் முன்பாக நின்று அவதானித்த பின்பே நள்ளிரவு வேளை கொள்ளையிட முற்படுகின்றனர். எனவும், கூறப்படுகிறது. கொள்ளை இடம் பெறவிருந்த வீட்டிலுள்ளவர்கள் திருமண வீடொன்றுக்குச் சென்று விட்டு வருவதனை அவதானித்த பின்னரே திருடர்கள் இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்டுள்ளனர்.

இவ்வாறு திருட்டில் ஈடுபடும் இளைஞர்கள் இவ்விடத்தைச் சேர்ந்தவர்கள் எனவும்,சிலர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வருவதோடு இவ்வாறான திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (06)

# ரணிலுக்கு எதிரான பிரேரணை 20ஆவது திருத்தத்தை பாதிக்காது

## என்கிறார் பீரிஸ்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் தேர்தல் சீர்திருத்த யோசனையான 20ஆவது திருத்த பாதிப்பு ஏற்படாதென நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் என்பவர் அரசியல் அமைப்பின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒருவர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

எனினும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதால் பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்படும் பிரேரணை 20ஆவது திருத்தத்தை பாதிக்காது என்று பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் முறிக் கொள்வனவில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் அர்ஜுன மகேந்திரனை ரணில் விக்கிரசிங்கவினால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கமுடியாது என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# மீள்குடியேறிய முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிவு

மன்னாருக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை மற்றும் முள்ளிக்குளம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று மீள்குடியேறிய மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தார்.

மீள்குடியேற்றத்தில் முசலி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அக்கிராமங்களில் நிலவும் குறைபாடுகள் பற்றியும் இங்கு கலந்து கொண்டிருந்த மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர், மற்றும் மீள்குடியேற்ற அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கிராம மக்களால் பாதை, வீட்டுத்திட்டம், குடி நீர் இன்மை, உள்ளக மின் இணைப்பு, மற்றும் போக்குவரத்து போன்ற முக்கிய சில தேவைகள் முன்வைத்தனர்.

மீள் குடியேற்றத்தில் முசலி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக உரிய தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் குடியேற்ற அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து இடம் பெயர்ந்து வாழும் முள்ளிக்குளம் கிராம மக்களை அமைச்சர் சுவாமிநாதன் நேரடியாக சென்று பார்வையிட்டதோடு முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்திருந்தார்.

இதேவேளை முள்ளிக்குளம் கிராமத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியை கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளதாகவும்,அந்த மக்களின் தொழில் வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அம்மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது,

இந்த நிலையில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கலான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் குனைஸ் பாரூக் ஆகியோர் கடற்படையினரினால் அபகரிக்கப்பட்ட காணியை பார்வையிடுவதற்காக நேரடியாக கடற்படை முகாமுக்கு சொன்றிருந்தனர்.

எனினும் கடற்படை முகாமின் பிரதான நுழைவாயிலில் சுமார் 15 நிமிடங்கள் வரை தடுத்து நிறுத்தப்பட்டதன் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

உள்ளே சென்ற அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை, தேவாலயம் ஆகியவற்றை பார்வையிட்டுள்ளனர்.

## தரம்...

தற்கான விண்ணப்பப்படிவங்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கோரப்படும்.

இம்முறை இந்த திகதியில் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

## பு,கோள...

இலங்கை அரசாங்கத்தின் நம்பகத் தன்மையான போர்க் குற்ற விசாரணை உறுதிப்பாடுகளை சந்தேகத்துக்குட்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி...

வீட்டில் இருந்து தாயாரின் வேலையிடமான கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றுக்கு சென்று தாயாரை சந்தித்துவிட்டு மதியம் 12 மணியளில் அங்கிருந்து வீடு செல்வதாக தெரிவித்து வெளியேறிய சிறுமி இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

இது வரை குறித்த சிறுமி தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லாத நிலையில் பெற்றோர் மிகவும் பதற்றத்துடன் உள்ளனர். (160-,29)

## தேர்தலில்...

அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கு பாரிய பணிகளை செய்ய முடிந்துள்ளதாக இரண்டு கட்சிகளின் பேச்சாளர்கள் சிலர் கூறியுள்ளனர். இதனால், அணி மாறுவதற்கு இடமளித்தால், இந்த ஒத்துழைப்புக்கு பங்கம் ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலர் கட்சி மாறுவதற்கு தயாராக இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கட்சிதாவும் விடயம் தொடர்பில் அறிந்தே கொண்டதை அடுத்து இரு கட்சிகளின் தலைவர்களும் இது குறித்து விரிவாக கலந்துரையாடிய பின்னர் மேற்படி இணக்கத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கில்...

துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து தாம் பொலிஸாருடனும், மாகாண கல்வி அமைச்சுடனும் சேர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவிலுள்ள ஒரு பாடசாலையில் பாடசாலை மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக 17 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவ்வாறான சம்பவங்கள் குறித்து பெற்றோர்கள், மாணவர்கள், அயலவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்வாறான பாலியல் வற்புறுத்தல், பாலியல் வல்லுறவுகளினால் மாணவிகள் பாரதூரமான நிலையமைக்கு தள்ளப்பட்டுள்கதாகவும் அவர் குறிப்பிட்டார்

(மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)

## நாடாளுமன்ற...

முன்னர் திட்டமிட்டிருந்தது.

எனினும் தேர்தல் முறை மாற்றத்தை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் தமிழ் மற்றும் பெரும்பான்மைக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணத்தினால் அந்த சட்டமூலத்தை உறுதிப்படுத்த முடியாதுள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் 20ஆவது திருத்தச் சட்டமூலத்திலுள்ள நெருக்கடிகளை ஆராய்ந்து அதனை இறுதிப்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்திருக்கிறார்.

எதிர்வரும் 3ஆம் திகதி கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்பதுடன், வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் எதிர்வரும் 9ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் தேர்தல் முறை மாற்றம் ஒரு திருத்தச் சட்டமூலமாக சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

# சம்பூரில் மீள்குடியேற சென்றோர் பொலிஸாரால் வெளியேற்றம்

## உயர் நீதிமன்ற வழக்கே காரணம்

(திருகோணமலை)

திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் காணிகளுக்குள் வெளியார் நுழைவதற்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமது மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து தமது காணிகளை துப்புரவு செய்த காணிகளின் உரிமையாளர்களும் தற்காலிக கொட்டில்களை அமைத்து அங்கு தங்கியிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

குறித்த காணி தொடர்பான வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் தற்போது விசாரணையில் இருப்பதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

காணிக்குள் நடமாடும் வெளியாரை வெளியேற்றுமாறு நீதிமன்ற அறிவித்தல் தங்களுக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்தே பொலிஸார் வெளியேறுமாறு கேட்டுக்கொண்டதாக சம்பூர் மக்கள் கூறுகின்றார்கள்.

இதன் காரணமாக கடந்த ஒரு வாரகாலமாக அந்தப் பகுதிகளுள் துப்புரவு பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களும் தற்காலிக கொட்டில்களில் தங்கியிருந்தவர்களும் அங்கிருந்து வெளியேறி விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் பதவிக் காலத்தில் இவர்களது குடியிருப்பு காணிகள் உட்பட அந்த பிரதேசத்திலுள்ள சுமார் 1100 ஏக்கர் நிலம் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்காகவும் கடற்படை பயிற்சி முகாமிற்கும் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகளில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த 818 ஏக்கர் நிலம் மீள்குடியேற்றத்திற்காக ஜனாதிபதியினால் இம் மாதம் வெளியிடப்பட்ட விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகள் இதுவரை அதிகாரபூர்வமாக அரசாங்கத்தினால் காணிகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை.

இருந்த போதிலும் காணிகளின் உரிமையாளர்கள் விரைவாக மீள்குடியேற்றம் இடம் பெறும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டு, சுயமாகவே சென்று காணிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்ட அதேவேளை, சிலர் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கியும் இருந்தனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடு செய்வதற்கு தயாராகவிருந்த நிறுவனமொன்று இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு எதிர்வரும் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வேகமாக பரவும் கண்நோய் சிகிச்சை பெற அறிவுறுத்து

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அண்மைக் காலமாக ஒருவித கண் நோய் வேகமாக பரவி வருவதாக சுகாதார தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன்படி கண்நோய்க்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு வைத்தியசாலையை நாடும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய கண் நோய் வைத்தியசாலையின் நிபுணர் டொக்டர் கபில பந்துதிலக்க குறிப்பிட்டார்.

கண்கள் சிவத்தல், கண்களில் அரிப்பு, கண்களில் கண்ணீர் மற்றும் கபம் வடிதல் ஆகியன இந்த நோயின் அறிகுறிகளாகும்.

சில சந்தர்ப்பங்களில் கண் இமைக்கு அருகில் வீக்கம் ஏற்படுதல் அல்லது கண்ணீருடன் இரத்தக்கசிவு போன்ற அறிகுறிகளும் ஏற்படலாம் என டொக்டர் கபில பந்துதிலக்க சுட்டிக்காட்டினார்.

கண் நோய்த் தொற்றுக்கு இலக்காகியிருந்தால் உடனடியாக தகுதியான வைத்தியர் ஒருவரை நாடி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## ஜனாதிபதி பதவி வகித்த பின்

# பிரதமராக வர நினைப்பது வெட்கம் என்கிறார் பௌசி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து விட்டு பிரதமராக இருப்பது மிகவும் வெட்கக்கேடானது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் வேறு சில கட்சிகளைச் சேர்ந்த நபர்கள் நெருக்கடிகளை ஏற்படுத்த முயற்சிப்பதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசியல் ரீதியான அகதிகளாக மாறப்போகிறோம் என்று அறிந்து கொண்ட சிலர் யாருடைய தோளில் ஏறியாவது நாடாளுமன்றத்திற்குள் வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் இதற்கு ஏமார்ந்து போயுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி பிரதமர் வேட்பாளராக போட்டியிட சந்தர்ப்பம் கோருகிறாராம்.

மகிந்த ராஜபக்ச பிரதமரானார் என்று வைத்துக் கொள்வோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்திற்கு வரும் போது பிரதமர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ச எழுந்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

மகிந்த ராஜபக்ச அதற்கு தயாரா எனவும் அமைச்சர் பௌசி கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஹெல உறுமயவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

## மக்கள் கொண்டு வருவர் என்கிறார் கம்மன்பில

(கொழும்பு)

ஹெல உறுமயவுக்கு எதிராக விரைவில் மக்களினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினை கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்களினால் கொண்டு வரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வ தற்கு தற்போது இருந்தே ஆயத்தமாக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

20ஆம் திருத்தச்சட்டம் சமர்ப்பிப்பதனை தடுக்கும் வகையில் செயற்படுவோர்க்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படும் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக பேச்சாளர் நிஷாந்த நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

அக்கருத்தின் அடிப்படையில் உதய கம்மன்பில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

# கசந்து விட்டது அரசியல் மனம் திறக்கும் கெஹலிய

(கொழும்பு)

அரசியல் வாழ்க்கை தனக்கு கசந்துவிட்டதாக முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றிபெறும்.

இந்த தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, பலமுள்ள அரசாங்கத்தை சிறுகட்சிகளின் உதவியுடன் அமைத்துக் கொள்ள முடியும். அரசியல் வாழ்வு எனக்கு கசந்துள்ளது. எதிர்காலத்தில் எடுக்கவுள்ள அரசியல் தீர்மானங்கள் குறித்து இதுவரை எவ்வித முடிவும் செய்ய முடியாமல் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாத அரசு

## வேண்டும் அரசியல் மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



இதனால், மாற்றமொன்றின் தேவை தற்பொழுது நாட்டில் மீண்டும் உணரப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தங்கல்லையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

# சட்ட ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

சட்ட ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் நியமனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்படி அதன் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் 14 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் ஜீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான பாலித பிரணாந்து, எஸ்.அனில் சில்வா, மனோஹார டி சில்வா, பேராசிரியர் ஹர்ஷ கபில்ராஜ், இக்ரம் மொஹமட், சஞ்ஜீவ பிரனீத் ஜெயராஜ் ஆகியோரும் சட்டத்தரணிகளான பேராசிரியர் லக்ஷமன் மாரசிங்க, தாரணி எஸ்.விஜேதிலக, பேராசிரியர் காமிலா குணரத்ன, எம்.சுவாமிநாதன், என்.செல்வக்குமார், நவீன் சரத்மாரப்பன, திசாத் விஜேகுணவர்த்தன, ஜீ.ஜீ.அருள்பிரகாசம் ஆகியோரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை 2015ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் குறித்த சட்ட ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுகர்வோர் சட்டங்கள் மீறல் 22 வர்த்தகர்களுக்கு அபராதம்

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறி பொருட்களை விற்பனை செய்த 22 வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் எம்.ஐ. வகாப்தீன் கடந்த வியாழக் கிழமை உத்தரவிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் கடந்த வாரங்களில் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் நடாத்திய சோதனை நடவடிக்கையில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலைகளிலும் பார்க்க அதிகூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்தமை, தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்ட 22 வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் வாக்களிப்போர் விண்ணப்பப்படிவம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் இடாப்பில் பெயர்களை உட்புகுத்துவதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். பிரதேச செயலக பிரிவில் கிராம அலுவலர் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜே. 87 கிராம அலுவலர் ஏ. சேந்தன் மீள்குடியேறியுள்ள சலக முஸ்லிம், தமிழ் மக்களுக்கும் படிவங்களை வழங்கியுள்ளார். பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றனர்.

அத்துடன் படிவங்களை பெறாதவர்கள் எதிர்வரும் வெள்ளிக் கிழமை அராலி வீதி 4ஆம் குறுக்கு தெருவிலுள்ள காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.(105)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.